படைக் கோட்பாட்டினை வழங்கக் கூடிய அர்த்த மண்டி என்கின்ற உடல் அமைவின் அமைப்பினை நோக்குதல் வேண்டும். இது ஒரு அமர்வு. முழங்கால் அளவில் மடங்கிய கால்களோடு இருபுறமும் விரிந்த நிலையில் தொடைகளும், அம்முறையிலேயே பாதங்களும் அமைந்து, எதிர் எதிர் திக்குகளை நோக்குவனவாக ஏறக்குறைய 180^0 கோணத்தில் அமைந்து, குதிகால்கள் இணைந்தோ அல்லது சற்று இடைவெளிவிட்டோ அமைவது 'அர்த்த மண்டி' என்ற அமர்வின் அமைவு எனலாம். இதனை நாட்டிய சாஸ்திரம் 'க்ஷிப்தம்' என்கிறது. இவ்வமர்விலிருந்தே எண்ணற்ற பல் வகை ஆடல் இயக்கங்களும் சதுரப் பாடுகளும் தோன்ற முடியும். கி.பி. எட்டாம் நூற்றாண்டளவில் இந்த 'க்ஷிப்தம்' என்ற அமர்வு இந்தியா முழுவதும் இருந்த ஆடல் வகைகளின் அடிப்படை மரபு எனக் கொள்ளப்பட்டுள்ளது. தென்னிந்தியாவில் மட்டும் எழிலாக்கம் பெற்றிருந்த தனிக் கூத்துகளிலும் இடம் பெற்றுள்ளது; நிலைப்புப் பெற்று இன்றும் காணப்படுகிறது. இந்த அடிப்படையினை இனி வரும் பத்து விளக்கக் காட்சிகளுக்கும் நினைவு கூர்தல் வேண்டும்.

காட்சி எண் : 1 :

ஒரு முழுமையான 'அர்த்த மண்டி' வடிவம் காணப்படுகிறது. ஆனால் உடலின் பளு முழுவதும் வலக்காலில் சாய்வதாக உள்ளது. உடலை வலப்புறம் சார்த்திப் பார்ப்பதாகக் காணப்படுகிறது. தலை இடப்புறம் ஒசிந்த நிலையில் ''அஞ்சித'' நிலையினைக் கொண்டிருக்கின்றது. மடக்கப் பெற்ற வலக்கரம் ''பதாகம்'' என்ற முத்திரையினை மார் பளவில் கொண்டுள்ளது. இடக்கரம் 'டோலம்' என்ற எழிற்கையாகத் திகழ்கிறது.

காட்சி எண் : 2 :

முழங்காலளவில் அமைந்த 'அர்த்த மண்டி' அமைவினை விளக்குகிறது. வலப்புற அரை சற்றே உயர்ந்து காணப்படுகிறது. முழங்கை அளவில் இரு கரங்களும் சற்றே நொடிக்கப் பெற்று இரு கரங்களும் உரிய இரு தொடைகளின் மேல் இருப்புக் கொண்டு ''கடி'' என்ற எழிற்கையாக உள்ளது. இக்காட்சியிலே இவ்வாடற் பெண்ணோடு தாளம் போடும் ஆண் கலைஞன் தம் மார்பளவில் தாளங்களை ஏந்தி அர்த்த மண்டி நிலையில் ஆடல் கொள்வானாகக் காணப்படுகிறான்.

காட்சி எண் : 3 :

'வைஷ்ணவஸ்தானம்' என்ற நிலையினை உணர்த்துவதாக, இங்குக் காணப்படும் கலைஞரின் கால்களின் நிலை காணப்படுகிறது. இதில் வலப்பாதம் அஞ்சித நிலையைக் குறிப்பதாக உள்ளது. இடது பாதம் சமநிலையிலும், முழங்கால்'க்ஷிப்தம்' நிலையிலும் உள்ளன. உடற்பளு முழுவதும் இடது பாதத்தில் அழுந்துவதாகக் காணப்படுகிறது. ஆதலின் இடப்பக்க அரை உயர்ந்து காணப்படுகிறது. வலக்கரம் பதாகத்தினையும், இடக்கரம் தோளுக்கு மேலாக நேருற நீண்டு ரேசித நிலையிலும் உள்ளது. தலை சமமாகவும் உடல் வலப்புறமாகச் சற்று ஒசிந்தும் காணப்படுகின்றன.

காட்சி எண் : 4 :

கீழ்வரிசையின் மேற்குத் திக்கில் ஆடல் விறலி ஒருத்தியும், அவளது இடப்புறமாக இசையாளன் ஒருவனது ஆடற்காட்சியும் உள்ளன. ஆடுநரின் வலப்புற அரை சற்றே உயர்ந்து வலது முழங்கால் இடக்காலை விட சற்று வளைந்து காணப்படுகின்றது. இரு பாதங்களுக்கும் இடையில் கணிசமான இடைவெளி உள்ளது. தலை சமநிலையில் உள்ளது. இடது கரம் இடது தொடையின் மீது இருப்புப் பெற்றுள்ளது. உடலின் மேற்பகுதி மார்பு வரை இடப்புறமாக வளைந்து காணப்படுகிறது. முழவுக் கலைஞன் 'க்ஷிப்தம்' நிலையில் இருக்க முழங்கால் பாதங்களினிடையே 3 செ.மீ இடைவெளி காணப்படுகிறது. கையகப் பட்டிருக்கும் தோற்கருவி (மத்தளம்) இரு தொடைகளையும் தொடும் அளவில் மையமாகக் காணப்படுகிறது. முழவுக் கலைஞனின் தலை ஆடல் விறலியை நோக்குவதாக அமைந்துள்ளது. வலக்கரத்தின் விரல்கள் மத்தளத்தின் வாய்ப் பகுதியில் இடம்பெற இடக்கர விரல்கள் மத்தளத்தின் மேலாக இடம் பெற்றுள்ளன.

காட்சி எண் : 5 :

இக்காட்சியில் மூன்று உருவங்கள் காணப்படுகின்றன. நடுவில் உள்ள பெண் 'வைஷ்ணவ' நிலையில் உள்ளாள். உடல் பளு முழுவதும் வலக்காலில் அழுந்துவதாகக் காணப்படுகிறது. வலது முழங்காலின் நளினமான வளைவு இக் கருத்தை அரண் செய்கிறது. இரு பாதங்களும் தரையின் மீது படிந்து காணப்படுகின்றன. இடக்காலின் கெண்டைக் கால் பகுதி நேருற்ற நிலையிலும், வலக்காலின் கெண்டைப்

பகுதி 135^0 அளவில் வளைந்தும் காணப்படுகின்றன. வலக்கரம் மடிந்து தோளளவு உயர்ந்து, முன்கரம் அதற்கு மேலாக 90° கோணத்தில், உயர்ந்து எழிலுறக் காணப்படு கிறது. இடக்கை 'லதா' என்ற எழிற் கரத்தைக் கொண் டுள்ளது. முழவிசைப்போன், விறலிக்கு இடப்புறமாக வைஷ்ணவ நிலையில் உடல் பளு முழுவதும் இடக்காலில் அழுத்துவதாகக் காணப்படுகின்றான். மத்தளம் அவனுடைய வலது தொடையின் மீது இடம் கொண்டுள்ளது. இம்முழ விசைப்போனின் வலக்கரம் முழவின் வாய்ப் பகுதியின் மேல் இடம் பெற்றுள்ளது. இடக்கரம் முழவின் பிறிதொரு வாயில் அழுந்தி முழவும் ஓசைக்குத்தக்க ஒலி அலைகளைத் தோற்றுவிக்கும் அமைப்பில் நாட்டிய இயக்கத்திற்கு ஏற்ப முழவிசைக்கும் சூழலைப் புலப்படுத்துவதாக உள்ளது.

தாளக்காரன் விறலியின் வலப்புறம் 'அர்த்தமண்டி' நிலையில் காட்டப்பட்டுள்ளான். விறலியின் ஆடலுக்கு ஏற்ற தாளத்தினையும் ராகத்தினையும் தரும் நிலையில் இத்தாளக் கலைஞன் விறலியை நோக்கிய நிலையில் தம் கரங்களில் ஏந்திய தாளங்களை மார்பளவு உயர்த்திப் பிடித்த நிலையில் காணப்படுகின்றான்.

காட்சி எண் : 6 :

விறலியின் உருவம் மட்டும் இக்காட்சியில் காணப்படு கிறது. வலப்பக்க அரை உயர்ந்ததாக வலது முழங்கால் நன்றாக வளைந்து காணப்படுகிறது. வலது குதிகால் சற்றே உயர்ந்து காணப்படுகிறது. (அக்ரதள சஞ்சாரம்) இடது பாதம் சமநிலையில் படிந்து காணப்படுகிறது. வலக்கை மடிந்து தலை அளவில் உயர்ந்து காணப்படுகிறது. இடக் கரம் மடிந்து தொடையளவில் காணப்படுகிறது.

காட்சி எண் : 7 :

இங்குக் காணப்படும் ஒரே உருவமான விறலியின் தோற்றம் அழிபாடுகளுடன் காணப்படுகிறது. உடல் பளு முழுவதும் வலக்காலின் மீது அழுந்துவதாக உள்ள நிலை யில் வலது முழங்கால் முழுவதும் நன்றாக வளைந்து காணப்படுகிறது. தலை இடப்புறமாக முற்றிலும் ஒசிந்து காணப்படுகிறது. இடது முழங்கால் வலது முழங்கால் அளவிற்கு வளைவு பெறவில்லை. கைகள் முற்றிலுமாக அழிந்து போய் உள்ளன.

காட்சி எண் : 8 :

இக்காட்சியில் விறலி மட்டுமே காணப்படுகிறாள். முன்னைய காட்சி போலவே அமைந்துள்ள இவ்வடிவாக்கத்தில் முழங்கால்கள் இரண்டும் இருபுறமும் திரும்பி காணப்படுகின்றன. பாதங்களுக்கிடையே மிகச் சிறிய இடைவெளி காணப்படுகிறது. வலக்கை வலது தொடையின் மீது இருப்பு பெற்றுள்ளது (ஊரு), இடக்கை மடிந்து தோளளவு உயர்ந்து அதன் மீதெழும்பி அலர் தாமரையைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

காட்சி எண் : 9 :

இக்காட்சியில் மூன்று உருவங்கள் காணப்படுகின்றன. நடுவில் காணப்படும் விறலியின் நிலை உடலின் பளு வலக்காலின் மீது அழுந்துவதாக உள்ளமையால் திரிபங்கத்தைக் காட்டுவதாக உள்ளது. வலது முழங்கால் நன்கு மடக்கப்பட்டு 'க்ஷிப்தம்' நிலையை உணர்த்துவதாக அமைய, இடது முழங்கால் மிகவும் இலேசாக மடக்கப்பட்டுள்ளது. வலது பாதமானது இடது காலைவிட சற்றுப் பின்னே வைத்துள்ளதாகக் காணப்படுகிறது. வலது கை நன்றாகத் தோளுக்குச் சற்று உயர்ந்த அளவில் நீட்டப்பட்டு 'ரேசிதம' என்ற எழிற்கையை உணர்த்துவதாக அமைந்துள்ளது. இடது கையானது மடக்கப்பட்டு மார்புக்கு அருகில் காணப்படுகிறது.

முழவு வாசிப்பவன் விறலிக்கு இடது பக்கத்தில் காணப்படுகிறான். விறலியின் உடல் இயக்கங்களுக்கு எதிருற முழவு வாசிப்போனின் உடலின் நிலை காணப்படுகின்றது.

முழவானது வலது தொடையின் மீது பொருத்தப் பட்டும், இடது கால் சற்றுப் பின்னேயும் காணப்படுகின்றன. இடது கை சிதைந்த நிலையில் காணினும் அது முழவின் மீது அழுந்துவதாக அமைந்திருக்க வேண்டும் என்று ஊகிக்க இயலுகின்றது. தாளம் வாசிப்போனின் இருகரங்களும் மார்புக்கருகில் காணப்படுகின்றன. அவனது உடல் விறலியை நோக்கியவாறு அமைந்தும், கால்களின் நிலையானது அர்த்த மண்டியை உணர்த்துவதாயும் உள்ளன. ஆனால் உடலின் பளுவானது மிகவும் குறைவாக வலக்காலின் மீது அழுத்துவதாக உள்ளது. ஆதலால் வளைந்த முழங்கால்களின் இடைவெளி ஒரு முழுக் குத்திட்ட சதுர வடிவத்தைக் குறிப்பதாக அமையவில்லை.

காட்சி எண் : 10 :

இக்காட்சியில் விறலியும், ஆண் முழவு வாசிப்போனும் காணப்படுகின்றனர். விறலியின் வலது பாதம் அக்ரதளத் தைக் காட்டுவதாகவும் இடது பாதம் தரையில் முழுதும் படிந்தும், பக்கவாட்டில் திருப்பப் பட்டும் காணப்படுகின் றன. உடலின் பளு நன்றாக இடது காலின் மீது அழுந்துவ தாக உள்ளது. அதனால் இடது அரையானது உயர்ந்து காணப்படுகிறது. இடது முழங்காலானது நன்கு மடிக்கப் பட்டு 'க்ஷிப்தம்' நிலையை உணர்த்துவதாக உள்ளது. வலது கை உடைந்து காணப்பட்டாலும் அது ' பதாகம்' என்ற தொழிற் கையைக் கொண்டுள்ளதாக இருக்க வேண்டும் என்று ஊகிக்க இயலுகின்றது. விறலியின் இடது கை மடக்கப்பட்டும், முன்கையானது தலை அளவில் உயர்த்தப்பட்டும் காணப்படுகிறது.

ஆடலுக்குத் தக்கவாறு முழவு வாசிப்போனின் உருவம் விறலிக்கு இடப்புறமாகக் காணப்படுகிறது. முழவின் வலப்பக்கமானது முழவு வாசிப்போனின் வலது தொடை யின் மீது அழுத்தப்பட்டும், வலக்கையின் விரல்கள் அம் முழவின் வாய் மீதும் காணப்படுகின்றன. இடது கையானது முழவின் மீது அழுத்தும் வகையில் அமைந்துள்ளது. இடது தோளின் உயர்வும், இடது முழங்கையின் மடக்கப்படாத நிலையும் இதனை உணர்த்துவதாக உள்ளன. மேல் விளக் கிய இரண்டு சிற்பங்களும் ஒழுங்கற்ற நிலையில் உள்ளன.

பொது மதிப்பீடு

இவ்வாறு பல்வேறு நிலைப்புகளை வடித்துக் காட்டும் இத்தளிச்சேரிப் பெண்டுகள் ஆடிய ஆடற் காட்சிகளை ஒரு ஆடலின் பல்வேறு நிலைகள் என்று சொல்ல இயலாது. மேலும் உடன் காணப்படும் ஆண் கலைஞர்களும் வேறு பட்ட ஆடல் நிலைகளில் காணப்படுகின்றனர். இரண்டு காட்சிகளில் மத்தளம் கொட்டுவோன் மட்டும் தென்பட மூன்று வேறு காட்சிகளில் தாளம் வல்லார் சித்திரிக்கப் பட்டுள்ளனர். தாளக்கலைஞர் மற்றும் மத்தளக் கலைஞர் இருவரும் விறலியோடு காணப்படுகின்ற காட்சிகள் பாட் டும் தாளமும் இயைபுற ஆடப் பெற்ற ஆடல்வகையினைச் சுட்டுவது எனக் கருத இயலும். தாளம் வல்லார் இராகத் தினையும், மத்தளம் கொட்டுவோர் தாளத்தினையும், ஆடல் விறலி பாவத்தினையும் புலப்படுத்துனராக உள்ளனர்.

மத்தளம் கொட்டுவோன் மட்டும் உடனிருந்து ஆடும் ஆடற்காட்சி 'சுத்த நிருத்தம்' என்ற வகை தழுவியதாக இருக்கலாம். அக்காட்சிகளில் 'தாள லயம்' மட்டுமே பாத ஒலிக்கு (ஜதி) இயைபுற, ஆடல் நிகழ்ந்துள்ளமையினை அறிய முடிகிறது. இசைக் கருவி வல்லார் துணையுற ஆடுகின்ற ஆடற் காட்சிகளில் எல்லாம் அவ்விசைக் கலைஞரும் ஆடுநரைப் போன்றே தாமும் உடல் அமைப் பினைப் பல்வேறு வடிவங்களில் இயக்கி ஆடுகின்ற நிலை யினைக் காணுகின்ற பொழுது இராசராசன் காலத்திய ஆடல்களில் துணை இசைக் கருவியாளர்களும் இணைந்து இயைபுற ஆடிய ஆடல் முறைமை புலனாகிறது. துணை இசைக் கருவியாளர்களை இயல்பான உருவ அமைவில் காட்டும் இவ்வாடற் காட்சிகள் குறுகிய வடிவம் படைத்த துணை இசைக் கருவியாளர்களைக் காட்டும் காட்சிகளி னின்றும் முற்றிலும் வேறுபட்டவையாகும். அக்கரணச் சிற்பங்களுள் கரணமாடும் ஆடுநருக்கே முதன்மை இடமும் இசை வழங்கும் துணையாளர்களுக்குப் பின்னிடமும் கொடுக்கப்பட்டுள்ளதை உருவ அளவீட்டு அமைப்பிலும் முன்பின் நிலையிலும் கண்டு உணரலாம். ஆனால் இச் சண்டேஸ்வரர் கோயிலில் உள்ள நாட்டியச் சிற்பக் காட்சி களில் துணை இசைக் கருவியார்க்கும், ஆடுநர்க்குரிய அதே உருவ அளவீடும் முன்னிலையும் காணப்படுகின்றமையா லும் தாண்டவக் கரணச் சிற்பங்களைப் போன்ற குறிப் பிடத்தக்க உடல் அமைப்பின் பல்வேறு கோண இயக்கங்கள் காணப்படாமையாலும் இதுபோன்றே தமிழகத்தின் பிற பகுதிகளில் பல்வேறு காலங்களைச் சார்ந்தனவாகக் காணப் படுகின்ற பெண் நாட்டியச் சிற்பங்களும் காணப்படுகின்ற மையாலும் இவ்வகை ஆடற் காட்சிகளே பெண்களால் பயிற்றப்பட்டவை என்பதனை உணர முடிகின்றது. ஆத லின் இவ்வகை ஆடற் காட்சிகளே பொது மக்களிடையே புழக்கத்திலிருந்து வந்த இராசராசன் காலத்திய நாட்டிய அமைப்பு எனக் கொள்வதில் தடையில்லை.

ஆடல் அரங்கம் குறித்த சில செய்திகளையும் இவ்வாய் விற்குரிய சிற்பக் காட்சிகள் புலப்படுத்துகின்றன. இரு வரியாக அமைந்துள்ள இந்நடனச் சிற்பங்களுக்கு இடையே உள்ள இடைவெளி ஆடல் அரங்க வடிவில் காட்டப்பட் டுள்ளமை உணரத்தக்கது. அம்முறையில் ஒவ்வொரு காட்சிக்கும் இடைப்பட்ட பகுதி கால் என்ற கட்டட உறுப் பினைக் கொண்டுள்ளது. மேல் வரிசையில் கரணை, கட்டை, பத்மம், யாளவரி, கால் மற்றும் கூடு என்ற அமைப்

புகள் காணப்படுகின்றன. இப்பகுதியினை அதிட்டானம் எனக் கொள்ளலாம். உபானம் என அழைக்கப்படுகின்ற கீழ்ப் பகுதி பீடம், உபபீடம், அதோமுக பத்மம், கட்டை, கால், துலாவரி, ஊர்த்துவ பத்மம் மற்றும் தளம் என அமைந்துள்ளது. இவ்வமைப்பினை முன்னர் நாம் கண்ட தஞ்சைப் பெரிய கோயிலின் நிருத்த மண்டபத்தின் புறச் சுவர் அமைப்பின் அடிப்படையில் காணமுடிகின்றது.

நிறைவுரை

இராசராசனுடைய காலத்தில் தமிழகத்தில் வழங்கிய பல்வகை நாட்டிய அமைவுகளும் அல்லது முறைகளும் தம்முள் இணைந்த சிறப்புக் கூறுகளை மட்டும் கொண்ட புதியதொரு வடிவமாக வல்லுநர்களால் ஒழுங்குறுத்தப் பட்டு ஓரமைவு பெற்றிருக்கின்றது. இம்முயற்சியை அரிதின் முயன்று செய்தவன் மாமன்னன் இராசராசன் எனலாம்.

ஆடற்கலையின் அருமைக் காட்சிகள் அல்லது அரிய காட்சிகள் எனத் தகும் தாண்டவக் கரண சிற்பங்களைத் தெய்வீகம் படைத்ததாகவும், ஆடவர் பயிற்றத்தக்கதாகவும் மிக உயர்ந்த உரிய அரங்குகளில் மட்டுமே ஒருசிலவாக இடம் பெற்றனவாகவும் கருதத் தக்கவகையில் முழுமையுற 108 என்ற அளவீட்டில் உருவாக்கி அமைத்துத் தந்தவன் முதலாம் இராசராச சோழனே எனக் கருதலாம். சிவனாரே ஆடுவதாக அமைத்த இத்தாண்டவச் சிற்பங்களைப் போன்ற எழில்மிக்க தாண்டவ வடிவங்கள் இந்தியாவில் எங்கும் இல்லை எனலாம். இதனைப் புனிதமுறவும், மறை எனவும் கருதிய இராசராசன் காலத்திய ஆடற் கோட்பாட்டினை விளக்குவனவாகவே இச்சிற்பங்கள் இடம் பெற்றுள்ள இட அமைப்பு விளக்குகின்றது.

பெண் விறலியர் ஆடுவதாகவும், துணை இசைக் கருவி யாளர்கள் இசை எழுப்பி ஆடுவதாகவும் அமைந்துள்ள நாட்டியச் சிற்பங்கள் சமுதாயத்தில் அன்றைய நிலையில் தளிச்சேரிப் பெண்டுகள் என்ற விறலியரால் நிகழ்த்தப் பட்ட ஆடலின் வடிவங்கள் எனக் கொள்ளலாம். இம்முறை ஆடல் வடிவமே பின்னர் ஒரு சில தாண்டவக் காட்சி களையும், உடல் இயக்கங்களையும் ஆங்காங்கு பெற்று வட்டார வழக்கிற்கேற்பவும் சமூக மரபிற்கேற்பவும் புதிய புதிய இணைவுகளை அல்லது ஒழுங்குகளைப் பெற்று 'ஆசிரிய முறைமை' என்ற முறையில் வேறுபட்டு வளர்ச்சி அடைந்துள்ளன. ஆதலின் இவ்வாடற் காட்சிகளுள் வட

இந்திய, தென்னிந்திய ஆடற்கலையின் தொழில் நுட்பங் களையும் ஆங்காங்கே அடையாளம் கண்டு கொள்ள முடி கிறது.

BIBILIOGRAPHY

Balasubrahmanyam, S. R., *Middle Chola Temples*, Thomson Press (India) Limited, Publication Division, 1975.

Kapila Vatsyayan., *Classical Indian Dance in Literature and Arts*, Sangeet Natak Akademi, New Delhi, Second Edition, 1977.

Man Mohan Gosh., *The Natya Sastra*, The Royal Asiatic Society of Bengal, 1950.

Raman K.V., *Temples as patron of Dance, Dances of India* Vivekananda Kendra Patrika, Vol. X Madras, 1981.

An Unique image of Somaskandamoorthy in Temple Art

A. Velusami Sudhanthiran

The images of Siva can be first classified under two broad heads those depicting his ugra or ghora (terrific aspect) and the others illustrating his saumya or santa (peaceful one). The images like Candrasekharamoorthy, Umasahitamoorthy, Alingana-candrasekharamoorthy, Somaskandamoorthy come under this group[1] These images are usually met with in all Siva temples which lay claim to some importance in South India.[2] The Somaskanda group constitutes three figures namely Siva, Uma and Skanda. This group occurs only in South India. The three figures represent Iccha sakti, Kriya sakti and Jnana sakthi respectively.[3] They also represent the three characters namely Sattu, Sittu and Ananda. The unique image of Somaskandamoorthy is present in the Agneeswarar temple at Thiruppugalur Nannilam Taluk, Tanjore District. The characteristic features of both Siva and Skanda in the group are common in many groups. Siva sits on padmapita. The upper two hand's of Siva have both Parasu and deer which are placed in between the index and middle fingers. The right lower hand is in abhaya pose and the left lower hand is in Kataka pose. The left ear has patrakundala and the right has makara kundala, jatamakuta adds beauty to the image. The siraschakra with lotus petals is very much pleasing to look at. Wristlets, keyuras, anklets add beauty and charm to the image. The right leg hangs down and the left is bending and placed on the pedestal.

Skanda is in dancing pose. The head is decorated with the karanda makuta. The hip ornament is decked with bells. The right hand holds the flower and the left hand simply hangs down. Channavira adds beauty to the chest. Wristlets, keyuras, anklets add beauty to the entire image.

Among the three figures of this group, the position of Uma deserves special mention. The features of Siva and Skanda are common in many examples. The presence of Nandi, in the left

hand of Uma is considered to be the unique feature as it is the only image which has such a representation of Nandi. A vivid and detailed account of the various images of Uma of Somaskanda groups will project the unique nature of the present image.

The earliest stone representation of the Somaskanda group occurs in the monuments of the Pallava period, especially in the Dharmaraja.[4] In this panel Siva, as indicated by his attitude is imparting words of wisdom and Uma is bending the tip of her right ear with her fore-finger so as to catch every word. Uma is seated in profile Uma's back abuts the niches edge. Uma's left hand is infront clasping Skanda's waist. The Uma of the Somaskanda panel of the Ramanuja mandapa at Mahabalipuram has similar features as the Dharmaraja ratha's group.[5] In the Somaskanda panel of the shore temple at Mahabalipuram, Uma leans on her left arm which holds nothing.[6] In all the Somaskanda panels of the Rajasimha period, the left hand of Uma is free from holding Nandi.[7] In the Pallava period, Somaskanda representation is also found in painting. The shrine No. 41 of the Kailasanatha temple at Kanchipuram, Chengleput District, Tamil Nadu, contains the beautiful Somaskanda painting. Here also Uma's left hand is free from holding Nandi. Here Uma, the mother of Skanda is a painters dream, a merit of brush work, a delicate subject, treated tenderly.[8] Uma is seated on a couch, with the right leg on her seat, and the left hanging down to rest on a cushioned foot's tool which is lost. The face is obliterated and one can imagine its beauty with gem-decked crown and flower-filled braid. The right hand caresses the child, the left simply rests on the seat and holds nothing.

During the period of the Cholas, the images of the Somaskanda group are of mainly in bronze. In all the images, she is free from holding Nandi. The Somaskanda group presents in the Pallavaneeswaram temple at Kavirippoompattinam, Sirkali Taluk,Thanjavur District, Tamil Nadu, is a notable example of the Chola period of the 9th Century A.D. Here the right hand of Uma holds the flower and the left is in Varada pose. Her right leg bends and the left hangs down. In the Somaskanda group from Thiruvalangadu, the right hand of Uma holds the flower and the left hand is in Kataka pose. This bronze is clearly of the transitional period from Pallava to Chola with

greater affinity to the Chola, idium as seen in the 9, 10th century early chola sculpture. The unconventional pose of Devi with her right leg lifted up and bent on the seat recalling similar Pallava figures, the presence of the lotus in her hand, and the little boy Skanda seated in a natural way almost lost in a reverie, in nearly almost the same fashion as in Pallava groups of Somaskanda, all suggest a very early date.[9]

In the Somaskanda group from Thiruvengadu, which belongs to the 10,11th century, the right hand of Uma is in the Kataka pose and the left is simply placed on the Pita holding noth ing.[10] Similar, features are found in the example from the Vaideeswarankoil which belongs to the last quarter of the 12th century AD and the coinage from Kilaiyur, South Arcot District, Tamil Nadu which belongs to the end of the first quarter of the 13th century AD. In the same skanda groups from the temples at Nidur Mayavaram, Thiruvidaimarudur, Thanikottam and Vellur Seruvarai, the right hand of Uma is in the Kataka pose and the left is in varada. In one Somaskanda group from Kunnandarkoyil in the Pudukottai district, the right hand of Uma is in kataka pose and the left hand is in simha-karna pose. The left leg hangs down and the right leg is in Kutkutikasana. In another image from Albert Museum, which belongs to the beginning of the 13th century AD, the right hand of Uma holds the flower and the left is in varada pose. The right leg is placed on the pita and the left hangs down.

In the Vijayanagar period the Somaskanda images appear in large number. Seperate mandapas were constructed to house the images in the prakaras of the temples. No images of this period also depict the presence of Nandi in the left hand of Uma. At Srisailam, in the Mallikarjuna temple, there is a metal image of Siva and Uma with the baby Skanda in their midst. It is an excellent piece having splendid testimony to the skill and power of Viayanagar craftsman. In one image from Nellore, the left hand of Uma is in the Varada pose and the right is in Kataka pose. In another group from the siva temple at Madeour, the left hand of Devi rests on the pitha and the right hand is in the Kataka pose.[11]

Uma as described in the texts

In no text is mentioned the presence of Nandi in the left hand of Uma of the Somaskanda group. The work Sakaladhikara says that the left hand of Uma carries the lily flower and the right hand is in varada pose.[12] Silaparatna states that the right hand of Devi should keep utpala flower and the left hand is held in the varada pose or it might rests an the pita.[13] Kasyapa Silpa sastram states that the left hand is in varada pose and the right hand holds the flower.[14] The Karanagama states that in her right Uma should keep a lotus flower, the left hand may be held either in the Simha Karana pose or keep it straight resting on the seat.

From the above detailed account of the Somaskanda images of different periods, it seems to be clear that the left hand of Uma is free from holding Nandi. Even the texts do not prescribe the presence of Nandi.

In South India, in bronze casting the sculptors rarely adopted custom of expressing the local traditional story in to a sculptural form. There are many such examples. The presence of Nandi in the hand of Uma of the Somaskanda group is also due to the local story which says that after killing Ravana, Rama went to worship the Lord Siva in the place called Thirunandeeswaram, which is just five kilometres to the east of Tiruppugalur. Nandi acted as a barrier for his worship. For the easy worship, Uma held the Nandi in her left hand and blessed Rama in Somaskanda form.

NOTES

1. Jitendranath Banerjee, *The Development of Hindu Iconography*, page. 470, 1974.
2. Gopinatha Rao, T.A., *Elements of Hindu Iconography*, *page* 129, 1971.
3. Vaithyalingam, S; *Tamilakak Kavin Kalai Matci (Tamil)* page 90, 1980.
4. Lockwood, Siromony, Dayanandan, *Mahabalipuram Studies*, page.20, 1974.
5. Sreenivasan, K. R., *Cave Temples of the Pallavas*, page.45, 1964.
6. Maity, S. K; *Masterpieces of Pullava art*, page.23, 1982.

7. Sreenivasan K.R., *Temples of South India*, page. 112, 1911.
8. Sivaramamoorthy, C., *South Indian Printings*, page. 65, 1968.
9. Sreenivasan, P. R; *Bronzes of South India*, page.120, 1963.
10. Saletore, R. N., *Vijayanagar Art*, page 107, 1982.
11. Gopinath Rao, T. A., *Elements of Hindu Iconography*, page.134, 1971.
12. Vasudeva Sastri. K., *Sakaladhikara* (Translation in Tamil), page. 64, 1961.
13. Devanathachariyar, *Silparatnam* (Tamil Translation), page.3, 1961.
14. Subrahmanya Sastri, *Kasyapa Silpa Sastram* (Translation in Tamil) page. 259, 1960.

சிற்பக்கலையில் புறக்கணிக்கப்பட்டுள்ள மரபு

இரா. கலைக்கோவன்

தமிழகத்து வரலாற்றில் தழைத்தோங்கி வளர்ந்த சிற்றரச மரபுகள் பலவாகும். அவற்றுள் குறிப்பிடத்தக்க சிலவற்றுள் சிறப்பிடம் பெறுவது பழுவேட்டரையர் மரபு. முதலாம் ஆதித்தனின் பத்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டின்[1] மூலம் அறிமுகமாகும் இம்மரபு முதலாம் இராசேந்திரனின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுடன்[2] வரலாற்று வெளிச்சத்திலிருந்து மறைந்து போகிறது. திருவையாற்றுக் கல்வெட்டால் இம்மரபின் முதல் மன்னனாக அறிமுக மாகிறார் குமரன் கண்டன். அவனி கந்தர்ப்ப ஈசுவர கிரக வளாகத்தில் உள்ள கல்வெட்டு வழி இம்மரபின் இறுதி மன்னனாய் விடைபெறுகிறார் கண்டன் மறவன். இந்த இரண்டு கல்வெட்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் ஏறத் தாழ நூற்று முப்பத்தொன்பது ஆண்டுகள். இந்தக் குறுகிய இடைவெளியில் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பழுவூர்ப் பகுதியை ஆளுகைக்குட்படுத்தி, பேரரசுப் பரப்பலில் பெருங்கவனம் செலுத்திக்கொண்டிருந்த சோழர்களுக்குப் பெருமளவில் உதவியபடியே தங்கள் பகுதியிலும் ஈடுபாடு கொண்டு, காணற்கரிய கலைக்கோயில்களை எழுப்பி, ஒன்பது பத்தாம் நூற்றாண்டுகளின் ஒப்பற்ற கலைமுறை களை அக்கோயில்களில் அமைத்து, வரலாற்று வரிகளில் அழியாத இடம்பெற்ற பழுவேட்டரைய மரபின் தொடக்கம், இயக்கம், வழிமுறை, முடிவு, கலைப்பணி இவை குறித்து டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வுப் பேரவை முழுமையான கள ஆய்வுகள் நடத்தியதில் பழுவூர்க் கோயில்களில் இருந்து நாற்பத்தொரு புதிய கல்வெட்டு களைக் கண்டுபிடித்ததுடன்[3], புதிய பார்வையில் பழுவூர் உண்மைகளை வெளிக் கொணர்ந்துள்ளது.

பழுவூரையாண்ட முதல் பழுவேட்டரையராய் அறியப் படுபவர் குமரன் கண்டன். இவரையடுத்துப் பொறுப்பேற்ப வர் குமரன் மறவன். இவர் குமரன் கண்டனின் இளவல். முதற் பராந்தகன் ஆண்ட ஆட்சியாண்டு வரை குமரன் மறவன் அரசாண்டதற்குக் கல்வெட்டுச் சான்று உள்ளது.

குமரன் மறவனையடுத்து, குமரன் கண்டனின் மகன் கண்டன் அமுதன் ஆட்சிக்கு வந்தார். இவர்தான் புகழ் பெற்ற வெள்ளூர்ப் போரில் பாண்டியரையும் ஈழத்த வரையும் எதிர்த்துப் போரிட்டுச் சோழர்க்கு வெற்றி தேடித்தந்த வீர வேந்தர். இவரது வெற்றியைக் கொண்டா டும் கல்வெட்டு, கீழப்பழுவூர் திருவாலத்துறைக் கோயிலில் இன்றும் காணப்படுகிறது.[4] இந்தக் கல்வெட்டைச் சரியாக விளங்கிக் கொள்ளாத நிலையில், சில வரலாற்றாசிரியர் களும், கல்வெட்டறிஞர்களும் கண்டன் அமுதன் வெள் ளூர்க் களத்தில் வாழ்விழந்ததாகவும், ராசசிம்மப் பாண்டி யன் போரில் உயிர் துறந்ததாகவும் தவறான தகவல்களைத் தந்திருக்கின்றனர்.[5] இவ்விரு செய்திகளுமே பிழையானவை என்பதை டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற் றாய்வுப் பேரவையின் ஆய்வுகள் ஐயத்திற்கிடமின்றி மெய்ப் பித்துள்ளன.

கண்டன் அமுதனையடுத்துப் பழுவூரை ஆளும் பொறுப் பில் மறவன் கண்டனைக் காண்கிறோம். குமரன் மறவனின் மகனான இம்மன்னன் சுந்தரசோழன் ஆண்ட ஆட்சி யாண்டிலிருந்து உத்தம சோழனின் ஒன்பதாம் ஆட்சி யாண்டு வரை அரியணையில் இருந்தமைக்குக் கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன.[6] உத்தம சோழனின் பதினைந் தாம் ஆட்சியாண்டு வரையில் மறவன் கண்டனின் மகனான கண்டன் சுந்தர சோழனும், அவரையடுத்து அவரது இளவல் கண்டன் மறவனும் பழுவூரை ஆண்டனர். பழுவூர் மரபின் இறுதி மன்னனாய்க் கல்வெட்டுகள் கோடிட்டுக் காட்டுவது கண்டன் மறவனைத்தான். முதலாம் இராசராசனின் பதி னைந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டிற்குப்[7] பிறகு இம் மன்னனை நேரடியாகச் சுட்டும் கல்வெட்டுகள் யாண்டும் கிடைத்தில. இவரது உடன் பிறப்பான கண்டன் சத்ருபயங் கரன், கண்டன் சுந்தரசோழனின் கல்வெட்டொன்றில் இடம் பெறுகிறார்.

இம்மரபின் கிளைவழியினரான பழுவேட்டரையன் கோதண்டன் தப்பிலிதர்மன், பழுவேட்டரையன் விக்கிர மாதித்தன் ஆகியோர் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின் றனர்.[8] இவர்கள் தவிர பழுவேட்டரையன் குமரன் மதுராந்த கன் என்பவரை டாக்டர் மா. இராசமாணிக்கனார் வர லாற்றாய்வுப் பேரவையினர் கண்டுபிடித்த புதிய கல்வெட் டொன்று வரலாற்று வெளிச்சத்திற்குக் கொணர்ந்துள்ளது.

இப்பழுவூர்ப் பேராளர்களின் கல்வெட்டுகளில் குறிக்கப் படும் கோயில்களின் எண்ணிக்கை பன்னிரண்டாகும்.

இவற்றுள் ஆலந்துறையார் கல்வெட்டுகள் குறிக்கும் குலோத்துங்க சோழ அக்கசாலை ஈசுவரம்[10], முடிகொண்ட சோழ ஈசுவரம்[11], யோகவனீசுவரம்[12], ஸ்ரீகண்ட ஈசு வரம்[13], மறவனீசுவரத்துக் கல்வெட்டு குறிக்கும் திருப்புலக் கீசுவரம்[14], பகைவிடை ஈசுவரத்துக் கல்வெட்டுகள் குறிக் கும் திருத்தோற்றமுடையார் என்னும் குலோத்துங்க சோழ ஈசுவரம்[15] என்னும் ஆறு கோயில்களும் இன்று காணு மாறு இல்லை. எஞ்சிய ஆறு கோயில்களுள் பகைவிடை ஈசுவரம் மேலப் பழுவூரிலும், தென்வாயில் வடவாயில் ஸ்ரீ கோயில்கள் கீழையூரிலும், ஆலந்துறையார், மறவனீசுவரம், அழகிய மணவாளப் பெருமான் கோயில் என்பன கீழப் பழுவூரிலும் இன்றும் கண்களுக்கு விருந்தளிக்கக் காத்து நிற்கின்றன.

இவற்றுள் மேலப்பழுவூரில் இருக்கும் பகைவிடை ஈசு வரமே கல்வெட்டு வாழ்க்கையில் மூப்புடையது. இக் கோயிலை அறிமுகப்படுத்தும் முதலாம் ஆதித்தனின் பதின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டே[16] பழுவூர் மரபின் முதல் மன்னனையும் அறிமுகப்படுத்துகிறது. சுந்தரேசுவரர் கோயிலென்று உள்ளூர் மக்களால் அழைக்கப்படும் பகை விடை ஈசுவரத்தின் மூன்று நிலைக் கோபுரத்தைப் பார்க் கும்போதே கண்களில் நீர் நிறைகிறது. எப்படி வாழ்ந்த கோயில்! இன்று சுற்றிலும் மக்கள் இருந்தும்கூட யாரும் கிஞ்சித்தும் கவலைப்படாமையால் இந்தக் கோயில் புயலில் சிக்கிய பூங்கொடி போலத் துவண்டுபோய் எதிர்கால நம்பிக்கைகளை அறவேயிழந்த நிலையில் நிற்கிறது. எப் போதும் பூட்டிய கதவுகளுடன் பொலிவிழந்து நிற்கும் இக்கோயிலுக்கு ஒருநாளைக்கு ஒருமுறை கீழப்பழுவூர்க் கோயிலைச் சேர்ந்த சிவாச்சாரியார் ஒருவர், அவருக்கு வசதிப்படும் நேரத்தில் நிதானமாக வந்து பூட்டிய கதவு களைத் திறந்து இங்குள்ள இறைவனுக்குத் தரிசனம் தந்து விட்டுச் செல்கிறார். இந்த ஒரு சில நிமிடங்களுக்குத்தான் அருள்மிகு பகைவிடை ஈசுவரத்து மகாதேவருக்கும் வெளி யுலகிற்கும் தொடர்பு. பிறகு மீண்டும் பூட்டிய கதவுகளும் சிறைவாசமும்தான்.

கோபுர வாயிலின் இருபுறமும் அழகு பொலியும் சோழர் காலத்து வாயிற்காவலர்கள். எப்போதோ பூசிய எண்ணெய்ப் பிசுக்கும், நெடுஞ்சாலைப் பேருந்துகள் அள்ளி வீசிய புழுதிப் பூச்சும் மேனியெழிலை மழுங்கடிக்க வலப்புறம் இருப்பவர் நேரே பார்க்கிறார். இடப்புறம்

இருப்பவர் இடுப்புக்குக் கீழ் வலப்புறம் திரும்பியபடி, நேர்கொண்ட பார்வையில் நிற்கிறார். கோயிலுக்குள் எங்கு பார்த்தாலும் புல்லும் முட்செடிகளும் காடாய் மண்டி யுள்ளன. 1986-இல்தான் டாக்டர் மா. இராசமாணிக்க னார் வரலாற்றாய்வுப் பேரவை பழுவூர்க் கோயில்கள் அனைத்திலும் உழவாரப் பணி செய்து கோயில்களைச் சீரமைத்துத் தந்தது.[17] வழிபாட்டுக்குரிய நிலையில் சீர் செய்யப்பட்ட கோயில்களைத் தொடர்ந்து நன்னிலையில் காத்திடுவோம் என்று உறுதியுரைத்த ஊர்மக்களின் கவனிப்பு ஏனோ தெரியவில்லை, இக்கோயில்களுக்குக் கிடைக்கவே யில்லை.

கோயில் வெளித் திருச்சுற்றின் தென்புறம் பூட்டிய கம்பிக் கதவுகளுடன் என்றுமே திறக்காத வாசல் ஒன்று. இக் கம்பிக் கதவுகளின் மேல் அய்யனார் சிற்பமொன்று சாய்த்து வைக்கப்பட்டுள்ளது. இவருக்கு எதிரே, கோயில் மகா மண்டபத்து நுழைவாயில் தூணொன்றில் சாய்ந்தபடி அழகிய, சோழர் காலத்துப் பிச்சையேற்கும் அண்ணலின் பொலிவான தோற்றம். முன் கைகளில் பாம்பும் கவரியும் இருக்கப் பின் கைகளில் உடுக்கையும் மானுக்குப் புல் தரும் மெய்ப்பாடுமாய்க் காட்சியளிக்கும் இவரின் இடுப்பணி யாய்ப் பாம்பு. இவருக்குப் பொழுதுபோக பக்கத்தில் பூதகணமொன்று வீணைவாசிக்கிறது. அழகான பூதகணம். ஆனால் நிலைமையும் இடமும்தான் சரியில்லை.

தெற்குச் சுற்றில் மதிலையொட்டியுள்ள அண்மைக் காலக் கட்டட அமைப்பினுள் ஊர்த்வ தாண்டவரும் எழுவர் அன்னையரும் குடிகொண்டுள்ளனர். ஊர்த்வ தாண்டவ ரின் இடக்கால் முழங்காலளவில் இலேசாய் வளைய இடப் பாதம் பார்சுவகமாய் கீழே குப்புறப்படுத்திருக்கும் முயல் களின் முதுகின் மீது முழுவதுமாய் ஊன்றிய நிலையில் காட்டப்பட்டுள்ளது. வலக்கால் வலத்தோளின் முன்புறம் தலைக்கு மேல் உயர்த்தப்பட்டிருக்க, வலப்பாதத்தின் உட் பகுதி வலப்புறம் பார்த்த நிலையிலும், புறப்பகுதி மகுடம் நோக்கிய நிலையிலும் உள்ளன. அழகிய சடா மகுடத்தின் மேல் சிறிய குடையமைப்பு. இறைவனின் முன் கை உயர்த்தப் பட்டிருக்கும் வலக்காலுக்குப் பின்புறமாய்க் காக்கும் குறிப்பு காட்டி நிற்கிறது. இட முன் கை மகுடத்தின் மேல் உயர, உள்ளங்கை மேல்நோக்கிய கொடி முத்திரையில் உள்ளது. பின் கைகளில் வலப்புறம் துடியும், இடப்புறம் பாம்பும். கவனிப்பாரற்ற நிலையால் முகம் சற்றே பொரிந்திருந்தா லும், இளஞ்சிரிப்பைச் சிந்தும் கவின் குறையவில்லை.

இங்குள்ள எழுவர் அன்னையர் சிற்பங்கள் சோழர் காலத்துப் பெருமைகள்.

மையக் கோயில் முக மண்டபம், மகா மண்டபம், உள் மண்டபம், கருவறை என்ற நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது. மகா மண்டபத்தின் வடபுறம் தெற்குப் பார்த்த மீனாட்சியம்மன் திருமுன், வெறுமையான உள் மண்டபம் கருவறைக்கு வழிவிடுகிறது. இங்கு வட்டமான ஆவுடையாரில் லிங்கத் திருமேனியராய்ச் 'சுந்தரேசுவரர்' என்ற பெயருடன் பகைவிடை ஈசுவரத்துப் பெருமான், சிவாச்சாரியாரின் சிலநொடி நேர தரிசனக் கருணைக்கு மகிழ்ந்தவராய் இருட்டிலும், தனிமையிலும் ஆண்டுகளை நகர்த்திக் கொண்டிருக்கிறார். கருவறையைச் சுற்றியுள்ள உள்திருச்சுற்றில் மன உறுதி உள்ளவரே சுற்றுவலம் வரமுடியும். இருட்டோ இருட்டு. நம் மூச்சுக்காற்று நம்மை அச்சுறுத்துவது போதாதென்று, வௌவால்கள் சிலவற்றின் படபடப்பு வேறு. காலை எதன் மீது வைக்கிறோமோ என்ற அச்சத்தின் காரணமாய் இதயத்துள் ஒரு குறுகுறுப்பு. திக்கித் திணறி திருச்சுற்று உலா வருவோர்க்கு ஒரு திகில் படம் பார்த்த உணர்வே மிஞ்சுகிறது.

தாங்கு தளத்திலிருந்து கொடுங்கை வரை கருங்கல்லால் ஆன இக்கோயில் விமானத்தின் இரண்டாம் தளம், செங்கல்லால் ஆன மூன்று நிலைகளைக் கொண்டுள்ளது. இந்த மூன்று நிலைகளின் நாற்புறத்திலும் பல்வேறு சிதையுருவங்கள். தென்புறத்தில் இயல்பான பாலுணர்வுச் சுதையுருவங்கள் காணப்படுகின்றன.

இக்கோயிலில் இருந்து கல்வெட்டுத்துறை பதினைந்து கல்வெட்டுகளைப் படியெடுத்துள்ளது.[18] டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வுப் பேரவை படியெடுக்கப்படாத பதினெட்டுப் புதிய கல்வெட்டுகளை இக்கோயிலின் பல்வேறு பகுதிகளிலிருந்து கண்டுபிடித்துள்ளது.[19] உத்தம சோழன் காலத்திலிருந்து, அரசு நிலையிட்ட ரெங்கப்ப மழவராயர் காலம் வரை பரவிக் கிடக்கும் இக்கல்வெட்டுகள் இரண்டு கோயில்களை நம் கண் முன் நிறுத்துகின்றன. இவற்றுள் ஒன்று இப்போதைய பகைவிடை ஈசுவரம். மற்றொன்று கண்டன் மறவனால் செங்கல் கட்டடமாக எடுக்கப்பட்டு, முதலாம் குலோத்துங்கன் காலத்தில் கற்றளியாக மாற்றப்பட்டு இன்று சுவடழிந்து போன திருத்தோற்றமுடையார் கோயில். இப்போதிருக்கும் பகைவிடை ஈசுவரமும், கல்வெட்டுகள் காட்டும் திருத்தோற்றமுடையார்

கோயிலும் ஒரே கோயில் என்று சில அறிஞர்களும் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும்,[20] டாக்டர் பாலாம் பாளும்[21] எழுத திரு. சுந்தரேச வாண்டையாரும், பகை விடை ஈசுவரம் அழித்தொழிந்ததாகக் குறிப்பிடுகின்றனர்[22]. இக்கூற்றுகளிலுள்ள பிழைகளைப் பார்ப்போம்.

இன்றிருக்கும் மையக் கோயிலின் கருவறை, உள் மண்டபப் புறச்சுவர்களின் அடித்தளப் பகுதிகளில் காணப் படும் நான்கு கல்வெட்டுகளும் பகைவிடை ஈசுவரத்தைக் குறிப்பவை. மையக் கோயில் மகாமண்டபத்தின் உட்சுவர் களில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளும் பகைவிடை ஈசுவரத்தைக் குறிப்பவை. திருத்தோற்றமுடையாரைக் குறிக் கும் கல்வெட்டுகள் அனைத்தும் இப்போதைய அம்மன் கோயிலின் புறச்சுவர்களில் மட்டுமே காணப்படுகின்றன. பகைவிடை ஈசுவரம் முதலாம் ஆதித்தன் காலந்தொட்டு இருந்து வருகிறது. இதைக் குறிக்கும் கல்வெட்டுகள் முத லாம் இராசேந்திரனின் பதினைந்தாம் ஆட்சியாண்டுவரை கிடைக்கின்றன.[23] திருத்தோற்றமுடையார், கண்டன் மறவ னால் உத்தமசோழன் ஆட்சியின் இறுதியாண்டுகளில் கட்டப்பட்டது. முதலாம் குலோத்துங்கன் காலத்தில் இக் கோயிலைக் கற்றளியாக்கிய இலங்கேசுவரன், செங்கல்லால் கட்டப்பட்ட திருத்தோற்றமுடையார் கோயில் சிதைந்து பாழாகி வழிபாடற்ற நிலையில் இருந்ததாகவும், அதைத் திருத்தம் செய்து கற்றளியாக்கிக் குலோத்துங்க சோழ ஈசுவரமாக்கியதாகவும் குறிப்பிடுகிறார்.[24] கண்டன் மறவன் கட்டிய செங்கல்தளி, பழுவேட்டரையர் வீழ்வால் ஒதுக்கப் பட்டது போலும். குலோத்துங்கன் காலத்தில், இக்கோயி லின் பரிதாப நிலை கண்டு மனம் குமைந்த இலங்கேசுவரன் இதைக் கற்றளியாக்கியுள்ளார். திருத்தோற்றமுடையார் கோயிலும் இப்போதிருக்கும் பகைவிடை ஈசுவரமும் ஒரே கோயில்தானென்றால் அந்தச் செய்தி ஏன் எந்தவொரு கல்வெட்டிலும் காணப்படவில்லை? பகைவிடை ஈசுவரம் முதலாம் ஆதித்தன் காலந்தொட்டு இருக்கும் கோயில். திருத்தோற்றமுடையாரோ உத்தமசோழன் காலத்தில் புதி தாய் எழுப்பப்பட்டது. இதைக் கண்டன் மறவனே கூறு கிறார்.[25] திருத்தோற்றமுடையாரும், பகைவிடை ஈசுவரமும் ஒன்றெனில் கண்டன் மறவன் கூறுவது பொய்யென்று ஆகிவிடும். மேலும் இடிந்து, சிதைந்திருந்த திருத்தோற்ற முடையாரைக் கற்றளியாக்கிய இலங்கேசுவரன், திருத்தோற்ற முடையாரைக் கற்றளியாக்கியதாகக் கூறுகிறாரே தவிர, பகை விடை ஈசுவரம் பற்றிய குறிப்பே இல்லை. இரண்டும் ஒரே

கோயிலென்றால், இலங்கேசுவரனின் கல்வெட்டுகள் அவ் வுண்மையைக் குறிக்காமல் விட்டிரா. கல்வெட்டுகளின் கூற்றை எடுத்துக் கொள்ளாமல் கற்பனைகளுக்கு வடிவம் கொடுப்பது நியாயமல்ல. திரு. சுந்தரேச வாண்டையார் இப்போதிருப்பது திருத்தோற்றமுடையார், அழிந்தொழிந்தது பகைவிடை ஈசுவரம் என்பதும் சரியல்ல. இவர் சொல்வது போல் இப்போதிருக்கும் கோயில்தான் திருத்தோற்றமுடை யார் என்றால், அழித்தொழிந்த பகைவிடை ஈசுவரத்தின் கல்வெட்டுகள் இக்கோயிலின் அடித்தளத்திலும், இக்கோயி லில் இருக்க வேண்டிய கல்வெட்டுகள் அம்மன் கோயிலின் புறச்சுவர்களில் மட்டும் காணப்படும் அதிசயமென்ன? திருத் தோற்றமுடையார் எழுந்த உத்தமன் காலத்தில் அம்மனுக்குத் தனிக்கோயில் எடுக்கும் பழக்கமில்லையென்பதை மறந்து விடக் கூடாது. அப்படியிருக்கத் திருத்தோற்றமுடையாரைக் குறிக்கும் உத்தமசோழன், இராசராசன் கல்வெட்டுகள் அம்மன் கோயில் சுவர்களில் சிதைந்து, தொடர்பின்றிக் காணப்படும் காரணமென்ன? இதற்கெல்லாம் விடை ஒன்று தான். திருத்தோற்றமுடையார் கோயிலென்னும் குலோத் துங்க சோழ ஈசுவரம், பகைவிடை ஈசுவரத்து வளாகத்தி லேயோ அல்லது அதற்கு அண்மையிலோ இருந்து அழிந்த கோயில். பிற்காலத்தில் பகைவிடை ஈசுவரத்தைத் திருப் பணி செய்தவர்கள் அம்மன் கோயிலையும், மகா மண்டபத் தையும் புதிதாக எடுத்த நிலையில், இடிந்திருந்த திருத் தோற்றமுடையார் கோயிலின் கற்களைப் பயன்படுத்திக் கொண்டார்கள். அதனால்தான் திருத்தோற்றமுடையார் கோயில் கல்வெட்டுகள் அனைத்தும் அம்மன் கோயில் சுவர்களில் இடம் மாறியும், சிதைந்தும், தொடர்பின்றியும் காணப்படுகின்றன. இந்தத் திருப்பணியே பகைவிடை ஈசுவரத்துக் கல்வெட்டுகள் சில இடம் பெயர்ந்தமைக்கும் காரணமாகலாம். எனவே எந்நிலையில் பார்த்தாலும் இப் போதைய சுந்தரேசுவரர் கோயிலே பகைவிடை ஈசுவர மென்பதும் திருத்தோற்றமுடையார் கோயில் இருந்து சுவ டழிந்தது என்பதும் உறுதிப்படுகின்றன.

அவனி கந்தர்ப்ப ஈசுவரகிரகம்

பகைவிடை ஈசுவரத்திற்கு எதிரில் சற்றுத் தொலைவில் உள்ளது அவனிகந்தர்ப்ப ஈசுவர கிரகம். இக்கோயில் வளாகத்தில் ஆறு சுற்றாலைக் கோயில்களும், இரண்டு மையக் கோயில்களும் பழுவேட்டரையர் காலத்துக் கலை வண்ணம் மாறாமல் காட்சி தருகின்றன. இங்கு நான்கு

சுற்றாலைக் கோயில்களே இருப்பதாக திரு. எஸ். ஆர். பால சுப்பிரமணியம் குறித்திருப்பது சரியல்ல.[26] இங்குள்ள வடவாயில் ஸ்ரீகோயிலைத் தென்வாயில் ஸ்ரீகோயிலென்று பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் தன் நூலில் தவறாகக் குறித்திருக்கிறார்.[27] திரு. சுந்தரேச வாண்டையார், கீழை யூரில் மூன்று கோயில்கள் இருந்ததாகக் கணக்குக் காட்டி, தென்வாயில் ஸ்ரீகோயில் புரப்பாரின்றி அழிந்தொழிந்த தாகக் குறிப்பிடுகிறார்.[28] அவர் அழிந்ததாகக் குறிப்பிடும் தென்வாயில் ஸ்ரீகோயில் இன்றும் நன்னிலையில் இருக் கிறது.

சுற்றாலைத் திருமுன்கள் ஆறில், ஒன்றில் முருகனும், ஒன்றில் கதிரவனும், ஒன்றில் பிள்ளையாரும், ஒன்றில் சண்டேசுவரரும், ஒன்றில் எழுவர் அன்னையரும் உள்ள னர். ஆறாவது சுற்றாலைத் திருமுன் இப்போது அபித குசாம்பிகை என்னும் அம்மனின் வாழிடமாய் மாறியுள் ளது. இந்தச் சுற்றாலைச் சிற்பங்களுள் கதிரவன், முருகன், எழுவர் அன்னையர் திருமேனிகள் பழுவேட்டரையர் காலத்துச் சிற்பப் புதையல்கள்.

இவ்வளாகத்திலிருக்கும் இரண்டு கோயில்களுள் வட வாயில் சிறிய கோயில். இதன் கருவறைப் புறச்சுவர் தேவகோட்டங்களில் உள்ள நான்முகன், சுப்பிரமணியர், ஆலமர் அண்ணல் சிற்பங்கள், பழுவூர்ச் சிற்பிகளின் கலையாற்றலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள். குறிப்பாக, ஆலமர் அண்ணல் சிற்ப அற்புதம். வல முன் கை, சின் முத்திரையிலும் இட முன் கை ஆலய வரத்திலும் இருக்க, வலப் பின் கையில் அக்கமாலையும், இடப் பின் கையில் மலரும் கொண்டு, சிவபெருமான் எளியோர்க்கு இளகிய இறைவனாய்த் திருத்தோற்றம் காட்டுகிறார். சடா மகுட மும், வீர அமர்வுத் திருக்கோலமும், எளிய, அழகிய ஆடை யணிகளும், கருணை பொலிந்த முகத்தோற்றமும் இந்தப் பழுவூர் படைப்பைச் சிற்ப இமயமாய் உயர்த்துகின்றன. இக் கோயிலில் உள்ள கோட்டச் சிற்பங்களில், அழகிலும், மெய்ப்பாட்டு வெளிப்பாட்டிலும், வடிப்புக் கூர்மையிலும் இச்சிற்பத்திற்கு இணை வேறில்லை. பார்த்துக் கொண் டிருக்கும்போதே பார்வைகளைக் கனிவிக்கும் பேரெழில் படிமம் இது. அன்பும், அருளும், கருணையும், பெருமிதமும் கலந்த மெய்ப்பாட்டு நிலையை இச்சிற்பத்தின் முகத்தில் தேக்கி வைத்த சிற்பியின் திறனை என்னென்பது! எப்படி வியப்பது!

கோட்டங்களுக்கு மேலுள்ள மகர தோரணங்களில் சிற்பங்கள் இருந்து பொரிந்துள்ளன. கொடுங்கையின் கீழ் பூதகணங்கள் அழகுக் கோலங்களில் காவியக் காட்சி படைக்கின்றன. இசை வல்லார்களைப் போல் இதயத்தை நெகிழ்விக்கும் இன்பக் கோலங்களில் இந்த இளைய. கணங்களின் அழகுக் காட்சிகள், ஆயிரமாண்டுகளுக்கு முற்பட்ட கலைப்பார்வைக்குக் கவிதைச் சான்றுகளாய் நின்று கண்களை நிறைக்கின்றன. வீணை, மேளம், தாளம், குழல் இவற்றை ஏந்தியும் இசைத்தும் சுவை கூட்டும் கணங்கள் ஒருபுறம். இந்த இசைக்கு ஏற்றாற் போல் அர்த்த ரேசிதத்தில் கைகளை நீட்டி, ஆடல் அடவுகளில் கால்களை வைத்து நாட்டியம் நிகழ்த்தும் கணங்கள் ஒரு புறம். இந்த இசைக் குழுவிற்கு இடையில் நிமிர்ந்தும் குனிந்தும், நின்றும் நடந்தும் சுவைக்கும் கூட்டமாய்ச் சுந்தர கணங்கள் சில ஒருபுறம். தாடியுடன் ஒன்று தவித்துப் பார்க்கிறது. கூடி மகிழ இன்னொன்று துணையைத் தேடுகிறது. கணங்களுக் குக் கூட இத்தனைக் கனவா என்ற கேள்வி நம் முன் எழுகிறது. கொடுங்கைக்கு மேல் யாளி வரிமானம். அதனை யடுத்த விமானத்தின் இரண்டாம் தளம் சாலை, கீர்த்தி முக விமான தேவதைகளுடன் வட்ட சிகரத்தில் அமைந் துள்ளது. இரண்டாம் தளத்தின் நாற்புறமும் சாலைக்கொரு தெய்வமும், கீர்த்தி முகத்தின் கீழொரு தெய்வமுமாய் எட்டுத் தெய்வ வடிவங்கள் காணப்படுகின்றன. வட்டமான சிகரம். இக்கோயிலின் கிழக்குச் சுவரிலுள்ள ஒரு கல் வெட்டு, முதலாம் இராசராசன் காலத்தில் பகைவிடை ஈசுவரத்தில் தளிச்சேரியொன்று இருந்த செய்தியைத் தரு கிறது.[29] இத்தளிச்சேரியும் வடசிறகு, தென் சிறகு எனப் பிரச்னையும், பலராய், ஆடல் மகளிர்களையும் கொண் டிருந்தமை கல்வெட்டுகளால் தெரிய வருகின்றது. 'இத்தளி கூத்தப்பிள்ளை' என்று பழுவூர்க் கோயில்களின் ஆடலா சிரியர்கள் சிலர் அழைக்கப்பட்டுப் பெருமைப்படுத்தப்பட் டுள்ளனர்.[30] பழுவூர்த் தளிச்சேரி பற்றிய செய்திகளை முதன் முதலாக வரலாற்றுலகிற்குத் தந்த பெருமை டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வுப் பேரவையைச் சாரும்.[31]

தென்வாயில் ஸ்ரீ கோயில், கோபுர வாயிலுக்கு எதிரில் அமைந்துள்ள அழகுக் கோயிலாகும். இதன் மகா மண்டபம் சிங்கயாளித் தூண்களுடன் சிறப்புறக் காட்சியளிக்கிறது. இந்தத் தூண்கள், மிகுந்த கலையழகுடனும், நயத்துடனும். சிற்ப நுணுக்கத்துடனும் அமைக்கப்பட்டுள்ளன.

குத்துக்காலிட்டு அமர்ந்த சிங்கத்தின் தலை மீது தூண் எழும்புகிறது. தலையின் மேல் ஒரு பலபட்டை உருளைப் பகுதியும், அதன் மேல் உடுக்கை போல் இடைப்பகுதியும், அதற்கும் மேல் விரிந்த வாய்க் குடுவை போல் மேற்பகுதியும் அழகாய் அளவாய் அமைய, பெரிய பலகை கூரையாய் நிற்கிறது. இந்தப் பலகையைத் தாங்கக் குடுவை வாயின் மேல் ஒரு தாங்கல். அமர்ந்திருக்கும் சிங்கங்களோ திறந்த வாயும், சுருள் முடியும், சுருட்டிய வாலும், பளிச்சிடும் கண்களுமாய் நம்மைப் பரவசப்படுத்துகின்றன. கால் விரல்களில் கூர்மையான நகங்கள். திறந்த வாயில் கோரைப் பற்கள். தென்புற வரிசையில் உள்ள முதலாவது, நான்கா வது தூண்களைத் தாங்கியுள்ளவை யாளிகள். வடபுறச் சிங்கங்கள் தென்திசை பார்த்தும், தென்திசைச் சிங்கங்கள் வடபுறம் பார்த்தும் அமர, மேற்குச் சிங்கங்கள் கிழக்கிலும், கிழக்குச் சிங்கங்கள் மேற்கிலும் நோட்டமிட்டபடி காட்சி தருகின்ற அழகு பார்த்தாலே உணர முடியும். இவற்றைக் கொடையாகத் தந்த பெருமக்களின் பெயர்கள் இத்தூண்கள் சிலவற்றிலேயே வெட்டப்பட்டுள்ளன. இக்கல்வெட்டு களைக் கொண்டு இம்மண்டபம் முதலாம் இராசராசன் காலத்தில் கட்டப்பட்டதாகக் கொள்ளலாம். இங்குள்ள கங்காதரர் திருமேனி கலையெழில் கொஞ்சும் சிற்பக் காவியம். நேரில் பார்த்தாலே இதன் அழகையும், அருமை யையும் முற்றிலுமாய் உணர்ந்து முழுவதுமாய் அநுபவிக்க முடியும்.

மகாமண்டபத்தை அடுத்துச் சிறிய இடைநாழிகை. பின் உள் மண்டபம்; கருவறை. உள் மண்டபத்து வாசலை இரண்டு வாயிற் காப்போர் காவல் செய்கின்றனர். காவ லுக்கு அவசியமே இல்லாத கருவறை என்றாலும், பழைய நினைப்பில் இவர்கள் கடமையாற்றிக் கொண்டுள்ளனர். வலப்புறம் இருப்பவரின் வலக்கை, 'பார்த்தீர்களா, எதிர் புறம் இருப்பவரின் கதியை!' என்பது போல் சுட்டு முத்திரையில் நீள, இடப்புறம் இருப்பவரின் வலக்கை, 'எல்லாம் காலத்தின் கோலம்' என்பதுபோல் வியப்பு முத்திரையில் விரிந்துள்ளது. சடாமகுடமும், கீர்த்தி முகமும், ஆந்தைக் குண்டலம், பனையோலைக் குண்டலமென செவி யணிகளும், நேர்த்தியான ஆடையமைப்பும் இருந்து என்ன பயன்? பல நூற்றாண்டுகளாய் மேலிருந்து ஒழுகும் மழை நீரும், இவர்கள் காவலை லட்சியம் செய்யாமல் கோயிலுக் குள் உறைந்திருக்கும் வௌவால்களின் எச்சங்களும், இன்னும் பலவிதமான கழிவுகளும் இந்த வாயிற் காப்

போரை வெள்ளையும் கருப்பும் கலந்த வேடிக்கை வினோதங்களாய் மாற்றியுள்ளன. தங்கள் திருக்கோலங் களைப் பார்க்கப் பிடிக்காமல்தானோ என்னவோ இரு வருமே தத்தம் முகங்களைப் பக்கவாட்டில் திருப்பிக் கொண்டு விட்டனர்.

தென்வாயில் கோயிலின் புறச்சுவர் கோட்டச் சிற்பங் களும் அழகு பொலிந்தவை. குறிப்பாகத் தென் கோட்ட சந்திரசேகர். வலப் பின் கையில் அங்குசமும், இடப் பின்கையில் மானும் கொண்டு, வலச் செவியை மகர குண்டலமும், இடச் செவியைப் பனையோலைக் குண்டல மும் அழகு செய்ய எழிலரசாய்க் காட்சி தரும் இவரின் முகப்பொலிவு சிற்ப அற்புதமாகும். திரு. எஸ். ஆர். பால சுப்பிரமணியம் இவரைத் தட்சிணாமூர்த்தி என்று குறிப்ப தோடு மட்டுமல்லாமல், படத்தையும் போட்டு அதன் கீழும் தட்சிணாமூர்த்தி என்று எழுதியிருப்பது வியப்பூட்டு கிறது.[11] ஆகமங்களின் சந்திரசேகரர் பற்றிய அருமையான வரையறைக்குள் அழகுற அடங்கும் இத்திருமேனியைத் தென்புறக் கோட்டத்தில் அமைந்துவிட்ட ஒரே காரணத்தால் தட்சிணாமூர்த்தி என்றழைப்பது எவ்விதத்தாலும் பொருந் தாது.

கருவறைப் புறச்சுவர் அரைத்தூணொன்றில் மகிடாசுர யுத்தம் சிற்றுருவச் சிற்பங்களாய்க் காட்டப்பட்டுள்ளது. இறைவி முத்தலை ஈட்டியுடன் பாயும் சிற்பமொன்று மேற்பகுதியில் இடம்பெற, கீழ்ப்பகுதியின் ஒருபுறம் இறைவி வாளும் கேடயமுமாய்ச் சிம்மத்தின் மீது அமர்ந்து சீற எதிரில் மகிடாசுரன் இதைப் பற்றிக் கவலைப்படாதவன் போல், அலட்டிக் கொள்ளாமல் நிற்கும் அழகை மிக அற்புதமாகச் சிற்ப வடிவில் சிறைப்பிடித்திருக்கிறார்கள், பழுவூர்ச் சிற்பிகள். இக்கோயிலில் காணப்படும் சிற்றுருவச் சிற்பத் தொகுதிகளுள் இது ஒன்றே பழுவேட்டரையர் காலச்சிற்ப நுணுக்கத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் நன்னிலையில் மிளிர்கிறது. பாயும் சிங்கத்தின் வேகமும், கோபமும், அதன் மீதிருக்கும் தேவியின் உணர்வுகளையும் விஞ்சிய நிலையில் காட்டப்பட்டிருக்கும் சிறப்பு சிந்தனையை மயக்கும் சுந்தரப் பேரழகாகும். விமான தேவதைகளுடன் வீணையேந்திய வித்தகராய் மேற்கு மாடத்தில் காட்சி யளிக்கும் சிவபெருமான் குறிப்பிடத்தக்கவர். வடபுற மாடத்து வடிவங்கள் சிவபெருமானின் பல்வேறு கோலங் களைக் காட்டுகின்றன. இவை அமைக்கப்பட்டிருக்கும் விதம்

புதுமையாக உள்ளது. இந்த அமர்வுக் கோலங்களை ஆகமங் களில் காணமுடியவில்லை.

கோட்டங்களுக்கு மேலுள்ள மகர தோரணங்களில் கிழக்கில் வினிவிருத்த கரணத்திலும், தெற்கில் ஊர்த்வஜாநு கரணத்திலும் சிவபெருமானின் ஆடல் தோற்றங்கள் சிற் றுருவச் சிற்பங்களாய்க் காட்டப்பட்டுள்ளன. இந்த இரண் டுமே இதுநாள் வரையிலும் 'சின்ன கரணங்கள்' என்று அடையாளம் காட்டப்படாமல் இருந்தவையாகும். 19 செ.மீ. உயரமும், 23 செ.மீ. அகலமும் கொண்ட இடை வெளியில் யானையை அழித்த மூர்த்தியின் ஓங்காரத் தோற்றம், ஓம் வடிவிலேயே உருவாக்கப்பட்டுள்ள அழகு, பழுவூரில் மட்டுமே காணக்கூடிய அற்புதமாகும். கஜமுக அசுரனை அழித்துக் காட்டிய அழகுக்கோலம் மையப்பகுதி யில் அமைய, வலப்புறம் பூதகணமொன்று அமர்ந்த நிலை யில், இரு கைகளிலும் தாளத்துடன் மகிழ்வுப் பெருக்கோடு காணப்படுகிறது. இடப்புறத்தில், அஞ்சிய முருகனை அணைத்துத் தேற்றுபவராய் உமை 'போகலாமா வேண்டாமா' என்று தயங்குபவர் போல விரியும் விழிகளில் வியப்பு தேக்கிக் கஜசம்காரரின் வீரப் பெருமிதத் தோற்ற எழிலில் தனைமறந்து நிற்கிறார்.

இடக்கால் ஊர்த்வஜாநுவாய் இடுப்பளவு உயர்த்தப்பட, வலக்கால் உறுதியாய்த் தரையில் ஊன்ற, இடுப்புக்குக் கீழ் உடலை வலப்புறமாய்த் திருப்பி, மேலுடலை நேர்ப்பட நிறுத்தி, முகத்தில் இலேசாய்ச் சினமும், அதனடியாய்ப் பெருமிதமும் பொங்க, அதிசயிக்கத் தக்கதொரு கோலத்தில் அழகாய்த் தோன்றும் யானையை அழித்த மூர்த்தியின் சடாமகுடத்தில் தலை தனியே தெரிகிறது. எட்டுத் திருக்கை களில் வலப்புறம் மூன்றும், இடப்புறம் மூன்றும், கிழிந்த யானைத் தோலைப் பற்றிப் போர்த்திய நிலையிலிருக்க விடுபட்ட வலக்கையில் முத்தலை ஈட்டியும், இடக்கையில் சுட்டுமுத்திரையும் கொண்டுள்ளார். யானையின் தலை இறைவனின் உயர்த்தப்பட்ட இடமுழங்காலுக்குச் சற்றுத் தள்ளி, வலப்புறமாய்க் கீழிருக்கும் பூதகணத்தின் தலைக்கு மேலாகக் காட்டப்பட்டுள்ளது.

யானையை அழித்த மூர்த்திக்கு மேலே உள்ள வளை வில் சிவபெருமானின் ஆடல் தோற்றமொன்று அழகுற வடிக்கப்பட்டுள்ளது. 12. செ.மீ. உயரமும் 9 செ.மீ. அகலமும் கொண்ட இடத்திற்குள் இறைவனின் நாட்டியம் நிறைவாய் நடக்கிறது. வல முன்கை காக்கும் குறிப்பில், இட

முன்கை அர்த்த ரேசிதத்தில் உயர்த்தப்பட்டுள்ளது. இடப் பின் கையில் பாம்பு, வலப் பின்கையில் இருப்பது உடுக்கை போல் தெரிகிறது. சடாமகுடத்துடன் முகத்தை இடப்பக்க மாக நிமிர்த்தித் திருப்பி இலேசாய்ச் சிரித்த நிலை. இறை வனின் இடக்கால் முழங்காலளவில் இலேசாய் மடங்கப் பாதம் முழுவதுமாய்த் தரையில் ஊன்றியுள்ளது. வலக் காலும் முழங்கால் அளவில் மடங்கியுள்ளது. ஆனால் வலப்பாதம், விரல்களின் நுனிகள் தரையைத் தொட்ட நிலையில், பாதத்தின் உட்பகுதி இடக்காலை நோக்கியிருக்க உயர்த்தப்பட்டுள்ளது. இந்த அமைப்பை ஆடற்கலைவல்லு நர்கள் ஆசி என்று சொல்வார்கள். இந்தக் காலமைப் புடன், அர்த்தரேசித இடக்கையும் இவ்வாடல் தோற்றத்தை வினிவிருந்தக் கரணமாக அடையாளம் காண உதவுகின்றன. தில்லை கரணக் கோவையில் வினிவிருத்தக்கரணமாகக் காட்டப்படும் ஆடல் தோற்றம் இப்பழுவூர் நாயகனைப் பெரிதும் ஒத்துள்ளமை இக்கருத்துக்கு மேலும் வலிமை சேர்க்கிறது. வினிவிருத்தக் கரணத் தோற்றத்தில் இறைவ னின் ஆடற்கோலம் அபூர்வமாகவே காணப்படுவதால் இப்பழுவூர்ப் படைப்பு பெரும் சிறப்புக்குரியதாகிறது.

சந்திரசேகரர் கோட்டத்தின் மேலுள்ள தோரணத்தில் சிவபெருமான் ஊர்த்வஜாநு கரணத்தில் புன்னகை பொலிய காட்சி தருகிறார். 17 செ.மீ. உயரமும் 19 செ.மீ. அகல மும் உள்ள பரப்புக்குள் ஆடல் வல்லானின் கரணக் காவியக் காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இந்த வளைவின் பக்க வாட்டில், மேற்புறத்தில், ஆடலைக்கண்டு ஆனந்தம் மிகக் கொண்டு போற்றும் மெய்ப்பாட்டில், கைகளில் மலர்க ளுடன் கந்தருவர் இருவர். கீழே வலப்புறம் ஆடலைப் பார்த்துக் கொண்டே, குள்ளச்சிறு பூதமொன்று தாளங்கள் தட்டி மகிழ்ந்து நிற்கிறது. அதையடுத்து இடக்கை, குட முழவை வாசிக்க வலக்கை, 'எத்தனை அற்புதமான தெய் வீக ஆடல்!' என்று மனம் நினைப்பதை, விரல் அசைவு களால் காட்டும் நிலையில் நந்திகேசுவரரின் நயமான தோற்றம். வளைவுக்குள் வலப்புறம் இன்னொரு பூதம் புல்லாங்குழலை இசைத்தபடி சொக்கி நிற்கிறது. இடப் புறத்தில் வளைவுக்கு வெளியே இரண்டு கணங்கள்! பார்வைகள் ஆடலின் மேல்! பரவசநிலையில் கைகளோ இசைக்கருவிகளின் மேல்! ஒன்று தாளம் கூட்டுகிறது. மற்றொன்று வீணை வாசிக்கிறது. பூரிப்பும், புன்சிரிப்பு மாய் இசை கூட்டும் இந்தக் கணங்களின் மகிழ்வு மயக்கம் அந்த ஆடல் நாயகனின் குமிழ்சிரிப்பிலா? அல்லது அந்தப் பெருமானின் கரணக் கோவைகளிலா?

நடுநாயகமாக இறைவனின் ஊர்த்வஜாநு. இடக்கால் முழங்கால் அளவில் இலேசாய் மடங்கப் பாதம் பக்க வாட்டில் திரும்பித் தரையில் ஊன்றியுள்ளது. வலக்கால், உயர்த்தப்பட்ட முழங்காலும், கீழ் நோக்கிய விரல்களுடன் இடப்புறம் திரும்பிய பாதமுமாய் ஊர்த்வஜாநுவில், எட்டுக் கைகளில் வலப்புற முன்கை காக்கும் குறிப்பு காட்டுகிறது. இடமுன்கை அர்த்தரேசிதமாய் மேலே உயர்த்தப்பட்டுள் ளது. வலப்புறப் பின் கைகளில் கீழிருந்து மேலாக முத்தலை ஈட்டி, குறுந்தடி, துடியிருக்க, இடப்புறப் பின்கைகளில் கீழிருந்து மேலாகத் தலையோடு, பாம்பு, தீயகல் உள்ளன. ஆடை முடிச்சுகளின் தொங்கல்களும் உடலின் வளைவு களும் கரண வேகத்திற்கு ஏற்ப காட்டப்பட்டுள்ளன. சடா மகுடராய்ச் சிரித்த முகத்தினராய்க் கண்களில் கருணை சுடர்விடக் களிநடம் புரியும் இந்தக் கரணக் காவியரைக் கண்டாரே கண்பெற்ற பயன் பெற்றார்.

விமானத்தின் முதல்தள கொடுங்கைக்குக் கீழ் பூதவரியும் சோழீச்சரம் போலவே சிறப்புடன் அமைந்துள்ளது. இதற்கு மேல் சாலையும், கர்ண கூடுகளுமாய் ஒரு நிலையும், கீர்த்தி முகக் கூடுகளுடன் கழுத்தும் அமைய, சாலைக்கும் கீர்த்தி முக நிலைக்கும் இடையில் ஒரு யாளி வரிமானம் அழகூட்ட சிகரம் நாகரமாய்க் கட்டப்பட்டுள்ளது. வடவாயில் போல் அல்லாமல் இங்கு ஒவ்வொரு சாலையிலும் இரண்டு மாடங்கள் இருப்பதால், அவற்றில் இரண்டு, கழுத்துப் பகுதி மாடத்தில் ஒன்று என பக்கத்திற்கு மூன்று தெய்வத் திருமேனிகள் நாற்புறங்களிலும் உள்ளன. மேற்குப் புறத் தில் மட்டும் கீழ்மாடத்தெய்வம், உள்மண்டபக் கூரைச்சுவர் சற்று உயர்த்திக் கட்டப்பட்டிருப்பதால் மறைந்துள்ளது. சிகரம் நாகர அமைப்பில் உள்ளது. இக்கோயிலின் கொடித் தளத்திலுள்ள கல்வெட்டொன்றைத் தவறாகப் புரிந்து கொண்டு, திரு. சுந்தரேச வாண்டையார் 'பழுவேட்டரையர் கைக்கோளன் ரணமுகராமன்' என்ற புதியதோர் பழு வேட்டரைய மன்னனை உற்பத்தி செய்திருக்கிறார்.[33] உண்மையில் இக்கல்வெட்டு குறிப்பது பழுவேட்டரைய மன்னனின் கைக்கோளப் படையைச் சேர்ந்த ரணமுக ராமன் என்பாரை.

ஆலந்துறையார் கோயில்

கீழையூரிலிருந்து மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ளது ஆலந்துறையார் கோயில். பழுவூர்க் கோயில்களில் மக்கள் மனத்தை அவ்வப்போதாவது நுகரும் வாய்ப்பைப்

பெற்றுள்ளது இக்கோயில் மட்டுமே. இக்கோயில் கோபுரம் ஒன்றுதான் அழகிய சுதையுருவங்கள் நிறையப்பெற்றுள்ள ஒரே பழுவூர்க் கோபுரம். இக்கோயிலில் இருந்துதான் அதிக அளவிலான புதிய, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டுகளை அடர்த்தியான சுண்ணாம்புப் பூச்சுக்குள் ளிருந்து டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வுப் பேரவை கண்டுபிடித்துள்ளது. கோயில் வெளி மண்டபத் தின் வடபுறம் அருந்தவ நாயகியின் திருமுன் உள்ளது. இதையடுத்து அலங்கார மண்டபம். இரண்டாம் கோபுர வாயிலின் வலப்புறம் பிள்ளையார் திருமுன்னின் முன்புறச் சுவர் முகப்பிலும் பக்கவாட்டிலும் சிற்றுருவச் சிற்பங்கள் உள்ளன. பிள்ளையாரே ஆடுகிறார், நாம் ஆடாமல் இருந் தால் எப்படி என்று இங்கே சில அழகியர் தம் நூபுரக் கால்களில் அசைவுகள் நிகழ்த்தி நூதன ஆடலை நிகழ்த்திக் காட்டுகின்றனர். சில சிற்பங்கள் பாலுணர்வு வெளிப் பாடுகளைப் பக்குவமாய்க் காட்டுகின்றன. விலங்கொன் றின் தழுவலில் தன்னை மறந்திருக்கும் தையல் ஒருத்தி. விலங்கோடு மனிதர்கள் உறவு கொள்ளும் நிலையைப் பாலுணர்வு இயலில் பீஸ்டியாலிட்டி (Bestiality) என்பர்.[34] இதுபோல் சிற்பங்களைத் தமிழகத்துக் கோயில்களில் பரவ லாகக் காணலாம். நாய், கழுதை, குதிரை, யானை, குரங்கு போன்ற விலங்குகளுடனும் பாம்பு, உடும்பு போன்ற ஊர்வனவுடனும் உடல் தொடர்பு கொண்டுள்ள மனித வடிவங்களைக் கோயில்களிலும் தேர்களிலும் காண முடி கிறது. இங்குள்ள இன்னொரு சிற்பம் ஓரின உறவில் தம்மை மறந்து மகிழ்ந்திருக்கும் மூன்று பெண்களைக் காட்டுகிறது. இச்சிற்பத்தொகுதிகள் பிற்பட்ட காலத்தவை.

இரண்டாம் கோபுரவாயிலினுள் நுழைந்தால் முகமண்ட பம் நம்மை எதிர்கொள்கிறது. இதன் கீழ்ப்புறத்தில் இரு புறமும் உள் திருச்சுற்றுக்கு நம்மை அழைத்துச் செல்லும் வாயில்கள் உள்ளன. இம் முக மண்டபத்தில்தான் ஆட வல்லான் திருமுன் உள்ளது. இத்திருமுன்னின் மேற்குச் சுவரிலிருந்துதான் குலோத்துங்க சோழ அக்கசாலை ஈசுவரம் பற்றிய கல்வெட்டை டாக்டர் மா. இராசமாணிக்க னார் வரலாற்றாய்வுப் பேரவை கண்டுபிடித்தது. இக் கோயில் இப்போது சுவடழிந்துவிட்டது. நாணயச் சாலை யொன்று பழுவூரில் அமைக்கப்பட்டிருந்த செய்தி பழுவூரின் முக்கியத் துவத்தை உணர்த்தவல்லது.

மகாமண்டப நுழைவாயில் கோட்டங்களில் மணவழக ரும், கங்காளமூர்த்தியும் உள்ளனர். இருவருமே சோழர்

காலத்துச் சிற்ப அற்புதங்கள். இரண்டனுள் மணவழகர் திருக்கோலம் அழகும், புதுமையும் கலந்த வடிவாகும். மகாமண்டபத்துள் செப்புத் திருமேனிகள் ஏராளமாக உள்ளன. இவற்றுள் மிகச் சிலவே பழமையானவை. பெரும்பான்மையன பிற்காலத்தவை. அழகற்ற இவற்றுள் சண்டேசுவரர் திருமேனிதான் பரிதாபமாகக் காட்சியளிக்கிறது. மூப்படைந்த புத்தத் துறவிபோல பார்க்கச் சகியாக் கோலத்தில் சண்டேசுவரர் வார்க்கப்பட்டுள்ளார்.

உள் மண்டப வாயிலின் மேலே பாம்பணைப் பரந்தாமன் சிற்பக் கோலத்திலிருக்கிறார். இவரைத் தவக்கோலத்துப் பரசுராமர் என்று தலவரலாறும், அதைத் தொடர்ந்து அறிஞர் பெருமக்கள் சிலரும் தவறாக அடையாளம் காட்டுகின்றனர்.[35] உள் திருச்சுற்று வழியே நுழைந்தால் திருச்சுற்று மாளிகையை அடைத்துக் கொண்டிருக்கும் சிற்பத் தொகுதியைப் பார்க்கலாம். மகா மண்டபப் புறச்சுவர்க் கோட்டங்களில் உள்ள சிற்பங்கள் காலத்தின் கோலத்தாலும், பேணிக்காப்பாற்ற யாருமற்ற நிலையாலும் பெரிதும் அழிந்துபோயுள்ளன. உள் மண்டபம், கருவறை இவற்றிலுள்ள கோட்டச் சிற்பங்களும் பேரெழில் படைத்தவை என்று சொல்ல முடியாது.

இக்கோயிலில் காணப்படும் இரண்டு கல்வெட்டுகள் இக்கோயிலைக் கற்றளியாக்கியவர் மறவன் கண்டன் என்கின்றன.[36] கல்வெட்டு உண்மையை மறுத்து இது பராந்தகன் காலத்துத் திருப்பணி என்கின்றனர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும், திரு. தியாகராசனும்.[37] இவற்றை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சம்பந்தர் பாடிய இக்கோயில், மறவன் கண்டனுக்குப் பிறகு பல திருப்பணிகளைக் கண்டுள்ளமைக்குச் சிதறிக்கிடக்கும் சில கல்வெட்டுகளும் கட்டட அமைப்பு முறையுமே சான்றாகும்.

இக்கோயில் கல்வெட்டுகள் காட்டும் யோகவனீசுவரம், முடிகொண்டசோழ ஈசுவரம், குலோத்துங்க சோழ அக்கசாலை ஈசுவரம், ஸ்ரீகண்ட ஈசுவரம் முதலிய கோயில்கள் சுவடழிந்து போய்விட்டன.

மறவனீசுவரம்

ஆலந்துறையாருக்கு அண்மையில் உள்ளது மறவனீசுவரம். இந்தச் சிறிய கோயில் சிதிலமான நிலையிலும், ஒரு சோகப் புன்னகையுடன் பழம் பெருமைகளின் நினைவெச்சங்களை அசை போட்டபடி சுமந்து நிற்கிறது. பெரிய

கோயிலான ஆலந்துறையாரே ஆளைத்தேடிக் கொண் டிருக்கும்போது இந்தச் சின்னக் கோயிலின் சிந்தனை யாருக்கு வரப்போகிறது? மனித மனங்களின் அழிவு வேட்கையை யாரும் பார்க்க விரும்பினால் மறவனீசுவரத் துக்கு வாருங்கள். நீளம் தாண்டுதல், கழைக்கூத்து, கயிற் றில் நடத்தல் போன்ற பயிற்சிகள் அவசியம். துணைக்கு இருவர் வருவது நலம். தப்பித் தவறிக் கோயிலைச் சுற்றி யுள்ள குழிகளில் விழுந்து விட்டால் தூக்கிவிட உதவியாக இருக்கும். காவல் நிலையம் அண்மையில் இருந்தும்கூட கோயில் கரைந்து கொண்டுதான் இருக்கிறது. வைக்கோல் போர்களைச் சார்த்தி வைக்கவும், வீட்டுக் குப்பைகளைத் தூக்கி எறியவும், வறட்டி தட்டி விற்று மகிழவும் இன்னும் இன்னோரன்ன செயல்களுக்கும் மறவனீசுவரமே மக்க ளுக்குத் துணை.

இனி இந்தப் பிறவியில் எனக்கு விமோசனம் இல்லை என்பது போல் நம்பிக்கை இழந்து, நாளும் நலிந்து கொண் டிருக்கும் இக்கோயிலின் தென்புறச்சுவர்கள் சாய்ந்தும், சரிந்தும் நிற்கும் நிலையைப் பார்க்கும்போது இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்தச் சிறிய கோயில் தாங்கும் என்பது தெரியவில்லை. கோயிலின் முன்புறம் நந்தி யொன்று, நல்ல காலம் வாராதா, நாம் இருக்க ஒரு மண்டபம் கிடைக்காதா என்ற ஏக்கத்தில் வெயிலையும், மழையையும் பொருட்படுத்தாமல் வேதனையுடன் காத் திருக்கிறது. கோயில் முகப்பின் வலப்புறத்தில் அழகிய வாயிற்காப்போர் சிலையொன்று முழுமையான திருமேனி யுடன் சாய்த்து வைக்கப்பட்டுள்ளது. வலக்கை சுட்டு முத்திரையிலும், இடக்கை மழுவை அணைத்த நிலையிலும் இருக்க இரு வளைவுக் கோலத்தில் அழகு பொலிய காட்சி தரும் இவ்வாயிற்காப்போரின் சடாமகுடப் புரிகள் முகத் தின் இரு புறமும் பரவி அழகுக்கு அழகு சேர்க்கின்றன.

முற்றிலும் கருங்கல்லால் ஆன இக்கோயில் உள் மண்டப வாயிலின் கதவு நிலையில் சிதைந்த கல்வெட் டொன்று காணப்படுகிறது. கணுக்கால் அளவு வௌவால் எச்சங்கள் பட்டு விரித்தது போல் பரவிக்கிடக்கும் இந்த உள் மண்டபத்தில் பிள்ளையாரும் அம்மனும், மேற்குப் புறத்தில் ஒருவரும், வடக்குப்புறத்தில் ஒருவருமாய்க் கரு வறையில் குடியிருக்கும் மறவனீசுவரத்து மகாதேவர்க்கு உற்ற துணைகளாய் உறைந்து போயுள்ளனர்.

இதுவரை எங்கும் பார்த்திராத புதுமையாக ஆவுடையாரின் மீது நின்ற கோலத்தில் அம்மன் அருள் செய்கிறார். இங்குள்ள யாருக்கும் இவ்வம்மையின் திருப்பெயர் தெரியவில்லை. கருவறையின் முப்புறம் கோட்டங்கள் உள்ளன. இவற்றில் தென்புறம் தென்முகக் கடவுளும், வடபுறம் நான்முகனும் இருக்க, மேற்குப்புறக் கோட்டம் வெறுமையாக உள்ளது.

தென்முகக் கடவுளின் முன் கைகள் சிதைவுற்றிருக்கின்றன. பின் கைகளில் அக்க மாலையும், பாம்பும் கொண்டு அழகு பொலியும் முகத்தோற்றத்தினராய்க் காட்சி தரும் இவர், திருவையாறு வடகைலாசத்திலும், சீனிவாசநல்லூர் ரெங்கநாதர் கோயிலிலும் காணப்படும் தென்முகக் கடவுளரைப் பெரிதும் ஒத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கோயிலின் வடபுறச் சுவரில் சாய்ந்த நிலையில் விஷ்ணுவின் திருமேனி. பின் கைகளில் சங்கும் சக்கரமும் இருக்க, வல முன்கையைக் காக்கும் குறிப்பில் காட்டி, இட முன்கையைக் கட்ய வலம்பிதத்தில் அமைத்து, கிரீட மகுடமும், பட்டாடையும், அழகிய உருண்டை முகமுமாய்க், குப்பைக் குழியில் நிற்கும் நிலையிலும், புன்முறுவல் பூத்தபடி காட்சியளிக்கும் இந்தப் பெருமானின் நிலை பரிதாபத்திற்குரியது. கோயில் சீரமைப்பின்போது டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வுப் பேரவையினரால் கண்டுபிடிக்கப்பட்ட சேட்டை தேவியின் சிற்பம் கோயிலின் வடகிழக்கு மூலையில் வைக்கப்பட்டுள்ளது.

கூர்மையான வடிப்புத் திறனும், அழகிய அரைத் தூண்களும், சிற்பங்கள் சிதைந்து போன நிலையிலும் சிறப்பாகத் தெரியும் மகர தோரணங்களும், பூதகண வரிசையும், கொடுங்கையின் அழகும் இக்கோயிலின் கட்டடக்கலை அருமைக்குச் சரியான சான்றுகளாம். கொடுங்கைக்கு மேல் செடி, கொடிகளைத் தவிர கட்டடம் எதுவுமில்லாத கொடுமையை என்னென்பது! விமானம் எப்போது இடிந்து சிதிலமானது என்பதே தெரியாத நிலையில், அது இருந்தமைக்கான சுவடுகள் கூட இப் போது காணப்படவில்லை.

அழகிய மணவாள சீனிவாசப் பெருமாள் கோயில்

மறவனீசுவரத்தை அடுத்து அழகிய மணவாள சீனிவாசப் பெருமாள் கோயில். மிக அண்மையில் கட்டப்பட்டுள்ள

இக்கோயிலில் இருந்து முதலாம் குலோத்துங்கனின் கல்வெட்டுத் துணுக்கொன்று கிடைத்துள்ளது. பழுவூர்க் கல்வெட்டுகள் குறிப்பிடும் இராசேந்திரன் காலத்து பவித்திர மாணிக்க விண்ணகரே,[38] குலோத்துங்கசோழன் காலத்தில் வீர சோழ விண்ணகராய்[39] மாறி, இன்று முற்றிலும் உரு மாறி அழகிய மணவாள சீனிவாசப் பெருமாள் கோயிலாய்க் காட்சியளிக்கிறதோ என்று கருதவேண்டியுள்ளது. பழமையின் சின்னங்கள் ஏதும் இக்கோயிலில் இல்லையென்றாலும், கிடைத்திருக்கும் கல்வெட்டுத் துணுக்கு,[40] இருந்தழிந்த கோயிலின் இடத்தில் இக்கோயில் எழுப்பப்பட்டிருக்கலாம் என்ற ஊகத்திற்கு இடம் தருகிறது.

முடிவுரை

இவ்வாறு, கோயில்களுள் அழகிய மணவாள சீனிவாசப் பெருமாள் கோயில் முற்றிலும் புதியது. எஞ்சிய ஐந்தனுள் மறவனீசுவரமே மிக இழிந்த நிலையில் தன் இறுதிநாட்களை எண்ணிக் கொண்டுள்ளது. இக்கோயிலில் இருந்து கிடைத்திருக்கும் கல்வெட்டுகளைக் கொண்டு பார்க்கும்போது, இதை முதலாம் பராந்தகன் காலத்தில் கட்டப்பட்டதாகக் கொள்வது பொருத்தமாகும். குமரன் மறவன் என்ற இரண்டாம் பழுவேட்டரைய அரசன் தன் பெயரில் எடுப்பித்த கோயிலாக இதைக் கொள்ளலாம். முதலாம் இராசராசன் தான் எழுப்பிய தஞ்சைக் கோயிலை 'ராசராசேசுவரம்' என்று பெயரிட்டார் போல, குமரன் மறவன் எழுப்பிய கோயில் மறவனீசுவரமென்று அழைக்கப்பட்டிருக்கலாம். இக்கோயிலின் கட்டட அமைப்பும், கோட்ட எண்ணிக்கையும், தென்திசைக்கடவுள் சிற்பத்தின் கலையமைப்பும் இக்கோயில் பராந்தகன் காலத்தது என்பதை உறுதிப்படுத்துகின்றன.

ஆலந்துறையார் கோயில் சம்பந்தரால் பாடப்பட்டது.[41] உத்தம சோழன் காலத்தில் பழுவேட்டரையன் மறவன் கண்டனால் கற்றளியாக்கப்பட்டது. இக்கோயிலின் கட்டட அமைப்பு, கோட்ட எண்ணிக்கை இவற்றைக் கொண்டு நோக்கும்போது இவ்வுண்மை உறுதிப்படுகிறது. கருவறை, உள்மண்டபம், மகாமண்டபம் இவை மறவன் கண்டன் காலத்திலும், பிற பகுதிகள் பிற்பட்ட மன்னர்களின் பல்வேறு காலங்களிலும் கட்டப்பட்டுள்ளன. இக்கோயிலின் புறப்பகுதிகள் பல திருப்பணிகளுக்கு ஆளாகியிருப்பதைக் கல்வெட்டுச் சிதறல்கள் காட்டிக் கொடுக்கின்றன.

அவனி கந்தர்ப்ப ஈசுவர கிரக வளாகத்தின் இரண்டு கோயில்களுமே பழுவேட்டரையர்களின் கலைப்புதையல் களாகும். இவையும் பிற்காலத்திய சீரமைப்புகளுக்கு ஆட் பட்டிருந்த போதும், அழிவு அதிகமில்லை. தென்வாயில் கோயிலின் கருவறையும் உள்மண்டபமும் ஒரு காலத்திலும், சிங்க மண்டபம் இன்னொரு காலத்திலும் எடுக்கப்பட் டுள்ளன. இக்கோயிலைக் கட்டியவர்கள் யாரென்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் இல்லையென்றாலும், இங்குக் கிடைக்கும் கல்வெட்டுகளைக் கொண்டு பார்க்கும்போது இவற்றைக் கட்டியவர்களாகப் பழுவூர் மரபின் முதல்வர் களான குமரன் கண்டனையும் குமரன் மறவனையுமே கொள்ள நேரிடும். கி.பி. ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுக் கலைமுறைச் சிற்பங்களைக் கொண்டிருக்கும் இக்கோயில் கள் இரண்டுமே தமிழர் தம் கலைத்திறனுக்கும், சிற்பம் வடிக்கும் ஆற்றலுக்கும், ஆடலறிவிற்கும், கட்டட அமைப் புத் திறத்திற்கும் சிறந்த சான்றுகளாகும்.

பகைவிடை ஈசுவரம் பல திருப்பணிகளைக் கண்ட நிலையில், கட்டட அமைப்பில் முற்றிலும் மாறி நிற்கிறது. கருவறையும், உள் மண்டபமும் கூட உத்தமசோழன் காலத் திற்குப் பிறகொரு திருப்பணியைக் கண்டவை போல் வடிவம் மாறிக் காணப்படுகின்றன. இங்குள்ள ஊர்த்வ தாண்டவர், எழுவர் அன்னையர் போன்ற சிற்பங்களும் பகைவிடை ஈசுவரத்தின் தாங்குதளக் கல்வெட்டுகளுமே இக்கோயிலின் பழமைக்கும் பெருமைக்கும் சான்றாய் நிற் கின்றன. பகைவிடை ஈசுவரம் முதலாம் ஆதித்தன் காலத் திலேயே குறிக்கப்படுவதால், இதைக் கட்டியவர்கள் யாரென் பதை அறியக்கூடவில்லை. இதைத் திருப்பணி செய்த பெருமை பழுவேட்டரையர்களுடையதாகலாம் என்பதற்கு இங்குள்ள வாயிற்காப்போர் சிற்பங்களும், பிற சிற்பங் களும் சான்றாகும்.

கேரளத்திலிருந்து வந்து, தமிழகத்தின் உயிர்நாடியான பகுதியில் குடியேறி அங்குள்ள மக்களோடு கலந்திணைந்து, காலப்போக்கில் அப்பகுதியை ஆளும் சிற்றரசர்களாகவே மாறி, சோழப்பெருவேந்தர்களின் பெருமைக்குரிய போர்த் தளபதிகளாய் இருந்து, அவர்களோடு தொடர்ந்து மண வினைகள் கொண்டு, ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுகள் இம்மண்ணில் இருந்து மறைந்த பழுவேட்டரையர்கள் இன்று மறக்கப்பட்ட மரபுவழிகளுள் ஒன்றாகப் புகழ்மங்கிப் போயினர். அவர்களால் கண்ணில் வைத்துப் போற்றப்

பட்ட கலைக்கோயில்களுள் சில சுவடழிந்தன. இருக்கும் கலைப்புதையல்களோ, மக்களின் புறக்கணிப்பிற்கு முற்றிலுமாய் ஆளாகிக் காற்றில் கரைந்துகொண்டிருக்கின்றன. தொல்பொருள் ஆய்வுத் துறையின் துவளாக் கைகளின் தொடர்ந்த தழுவல் இல்லையென்றால், தமிழகத்தில் பழுவேட்டரையர் பெயர் சொல்ல எஞ்சியிருக்கும் இந்தக் கற்காவியங்களையும் காற்று கரைத்துக் கொண்டு போய் விடும்.

குறிப்புகள்

1. S.I.I. Vol. V, INS. No. 523.
2. Ibid., INS. No. 665.
3. Indian Express, 23.12.1988.
4. A. R. E. 231 of 1926.
5. வை. சுந்தரேச வாண்டையார், 'பழுவேட்டரையர்', கல்வெட்டுக் கருத்தரங்கு, 1966, புக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை, 1968, ப. 125.
   இல. தியாகராசன், 'கீழப்பழுவூரில் பள்ளிப்படைக் கோயில் கண்டுபிடிப்பு', கட்டுரை, தினமலர் (நாளிதழ்), திருச்சி பதிப்பு, 27.12.1987.
   A. R. E. 1925-26, Part II, No. 16, P. 102.
6. S.I.I. Vol. V. INS. No. 679; S.I.I. Vol. XIX, INS. No. 237,238
7. A. R. E. 363 of 1924.
8. S.I.I Vol. XIX, INS. No. 23, 212.
9. மாலைமுரசு, நாளிதழ், திருச்சி பதிப்பு, 24.1.1988.
10. இக்கல்வெட்டு டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வுப் பேரவையால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.
11. S.I.I. Vol. V, INS. No. 673.
12. இக்கல்வெட்டு டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வுப் பேரவையால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.
13. இக்கல்வெட்டு திரு. இல. தியாகராசனால் புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டது.
14. A. R. E. 223 of 1926.
15. A. R. E. 392 of 1924.
16. S.I.I. Vol. XIII, INS. No. 235.
17. The Hindu, 21.3.1986.
18. A. R. E. 338-402 of 1924.
19. மாலை முரசு, 24.12.1988.
20. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், தமிழ் வெளியீட்டுக்கழகம், சென்னை, 1966, பக். 99-101.

21. வெ. பாலாம்பாள், பழுவேட்டரையார்கள், சென்னை, 1981, ப. 65.

22. வை. சுந்தரேச வாண்டையார், 'பழுவேட்டரையர்', கல்வெட்டுக் கருத் தரங்கு, 1966, ப. 125.

23. A. R. E. 372 of 1924.

24. A. R. E. 393 of 1924.

25. S.I.I Vol. XIII, INS. No. 98.

26. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், சோழர்கலைப்பாணி, பாரிநிலையம், சென்னை, 1966, ப. 54.
S. R. Balasubramanyam, Four Chola Temples, N. M. Tripathi Pvt. Ltd., Bombay, 1963, P. 15.

27. K. A. Nilakanta Sastri, The Colas, Plate No. IV, Fig. 8, and P. 750.

28. வை. சுந்தரேச வாண்டையார், 'பழுவேட்டரையர்', கல்வெட்டுக் கருத் தரங்கு, ப. 125.

29. A. R. E. 384 of 1924.

30. A. R. E. 386, 399 of 1924; S. I. I Vol. XIX, INS. No. 140.
கல்வெட்டறிக்கையில் (386, 399) 'இத்தளி கூத்தப்பிள்ளை' என்ற அழைப்பு விடுபட்டுள்ளது.

31. இரா. கலைக்கோவன், 'பழுவூர்த் தளிச்சேரி', தமிழரசு, திங்களிருமுறை இதழ், 1.8.1988, ப. 24-26.

32. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், சோழர் கலைப்பாணி, ப. 57, படம் எண். 29 (பின் இணைப்பு).

33. வை. சுந்தரேசவாண்டையார், 'பழுவேட்டரையர்', கல்வெட்டுக் கருத் தரங்கு, ப. 126.

34. Dr. M. K. R. Krishnan, Hand Book of Forensic Medicine, 1981, Paras medical Books, Hyderabad, P. 121.

35. வெ. பாலாம்பாள், பழுவேட்டரையர்கள், ப. 74.
வி. சா. குருசாமி தேசிகர், திருப்பழுவூர் — திருமழபாடித் திருப்பதிகங் கள், ப. 9.

36. S. I. I. Vo. XIX, INS. No. 384; இன்னொரு கல்வெட்டு டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வுப் பேரவையால் கண்டு பிடிக்கப்பட்ட புதிய கல்வெட்டாகும்.

37. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், சோழர் கலைப்பாணி, ப. 72.
இல. தியாகராசன், 'கீழப்பழுவூரில் பள்ளிப்படைக் கோயில் கண்டு பிடிப்பு' தினமலர், நாளிதழ், திருச்சி பதிப்பு.
27.12.1987.

38. A.R.E. 372 of 1924.

39. S.I.I. Vol. V, INS. No. 673.

40. A. R. E. 224 of 1926.

41. சம்பந்தர், இரண்டாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1954, பக். 151-153.

துணைநூற் பட்டியல்

1. Annual reports of Indian Epigraphy — Volumes 1895, 1905, 1911, 1912, 1918, 1924, 1926, 1928
2. Balambal. V., Feudatories of South India, chugh Publications, Allahabad, 1978.
3. Balasubramanyam. S.R., Early Chola Temples, Orient Longman, Madras, 1971.
4. Balasubramanyam. S.R., Four Chola Temples, N. M. Tripathi Pvt. Ltd., Bombay, 1963.
5. Epigraphiq India Volume XV.
6. Gopalan. R., History of the Pallavas of Kanchi, University of Madras, Madras, 1928.
7. Gopinatha Rao. T.A., Elements of Hindu Iconography, Second edition Vol. I, Part II, Motilal Banarsidas, Delhi, 1985.
8. Govindasamy. M. S., The Role of Feudatories in Later Chola History, Annamalai University, 1979.
9. Nilakanta Sastri. K. A., A History of South India, Oxford Madras University Press, Madras, 1958.
10. Nilakanta Sastri. K. A., The Cholas, University of Madras, Madras, 1955.
11. South Indian Inscription — Volumes II, III, V, VII, VIII, XIII, XIX.
12. Subramanya Aiyar. K. V., Historical Sketches of Ancient Decan, 1967.
13. இராசமாணிக்கனார், மா., பல்லவர் வரலாறு, கழகவெளியீடு, சென்னை, 1977.
14. கலைக்கோவன். இரா., எழில்கொஞ்சும் எறும்பியூர், கழக வெளியீடு, 1987.
15. பிள்ளை. கே. கே., தமிழக வரலாறு — மக்களும் பண்பாடும், தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1977.
16. சதாசிவ பண்டாரத்தார். தி. வை., பாண்டியர் வரலாறு, கழக வெளியீடு, சென்னை, 1977.
17. சதாசிவ பண்டாரத்தார். தி. வை., பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு, 1974.
18. சம்பந்தர், இரண்டாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1954.
19. சிலப்பதிகாரம், மூலமும் வேங்கடசாமி. ந. மு., நாட்டார் உரையும், கழக வெளியீடு, 1959.
20. நாகசாமி, இரா. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள், முதற்பகுதி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, சென்னை, 1969.
21. பத்மா சுப்பிரமணியம், பரதக் கலை கோட்பாடு, வானதி பதிப்பகம், சென்னை, 1985.
22. புலவர் அரசு. பெரியபுராண வசனம், கழக வெளியீடு, சென்னை, 1979.
23. பாலசுப்பிரமணியம். எஸ். ஆர்., சோழர் கலைப்பாணி, பாரிநிலையம், சென்னை, 1966.
24. பாலசுப்பிரமணியம். எஸ். ஆர்., முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1966.
25. பாலாம்பாள். வெ., பழுவேட்டரையர்கள், சென்னை, 1981.

BUDDHIST VESTIGES IN THE NADU NADU REGION

T. Chandrakumar

Introduction

Buddhism in Tamil country[1] received a great impetus during the great Mauryan emperor, Asoka. Buddhist ideals and tenets got exalted mainly due the missionary zeal of Asoka. Mahendra, the son of Asoka, is said to have erected seven *Viharas* at Kancipuram (Cg. Dt.), while he was heading towards Ceylon for the propagation of Buddhism. The *Vihara* at Nagapattinam appears to have been erected during this period. The prominency which it had attained in such an early period is well attested by copious references from the huge mass of Sangam Tamil literature assignable from 2nd century B.C. to 2nd Century A.D. *Purananuru (166:1-9) Pattuppattu, Patirrupattu, Maturai Kanci, Pattinappalai* and the twin epics *Silappatikaram* and *Manimekhalai* shed light on the exaltation of Buddism in ancient Tamil country. *Mankuti Marutanar,* the author of *Maturaikanci*, refers to the Buddhist monasteries at Maturai.[2] *Katiyalur Uruttiran Kannanar in Pattinappalai* mentions both Buddhist and Jain monasteries as *tavappalli*[3]. *Manimekhalai* glorifies Kancipuram as a seat of Buddhist culture. A Buddhist chaitya had been built there by the Cola prince Killi.[4] *Silappatikaram* contain references to Buddha, the *Indravihara* of Puhar (Kaveripumpattinam) and the Mabodi (Mahabodhi)[5]. Both the epics throw much light on the tenets of Buddhism. It appears that the mountain caverns served as the abode for monks, wherein one finds Tamil Brahmi script of the sangam period. Anaimalai, Kalugumalai, Varicciyur, Virasihamani, Marugaltalai, Siddharmalai, Tirupparankunram and Arittapatti were some of the abodes of Buddhist monks in the far South of Tamil country.

Kalabhra kings (5th - 6th Century A.D.) who occupied the Tamil country at the wake of the decline of Sangam culture appear to have patronized Buddhism. A certain king Accuta Kalabha *alias* Accutavikkanta of this line can, however, be

regarded as a great patron of Buddhism.[6] Buddhism continued to flourish and had a large following until 5th-6th centuries A.D. with the advent of the Bhakti (devotional) movement during 7th century A.D. the Hindu revivalists like Alwars and Nayanmars propagated the Hindu faiths and gave a severe blow to Buddhism. It began to fall behind afterwards. Buddhism seldom attracted the people since the great pallava kings (7th-9th centuries A.D.) were the staunch patrons of Hindu faith. Only certain areas of Buddhism continued to thrive, others were at the brink of disappearance. Kancipuram continued to flourish indomitably like the proceding century. Hieen-Tsang, the Chinese pilgrim who visited the South around 640 AD mentioned that there had been a hundred monasteries with more than 10,000 breathern. There was a *Vihara* called Rajavihara during the reign of Mahendravarma Pallava (AD 590-629) presumably constructed by an early king of the Pallava dynasty.

Under the Imperial Colas of Thanjavur (10th-14th centuries A.D.) and the Pandyas of Maturai (13th-14th centuries A.D.), Buddhism had been definitely less popular than Jainism. The Pandya King Rajasimha II (A.D. 900-929) is said to have granted gifts to Buddhists as well as Jains.[8] Sekkilar's *Periyapuranam*, a work of the 12th century A.D. vouchsafes the existence of a monastery and an exclusive colony of the Buddhists at Bodhimangalam (Mayavaram Taluk, Thanjavur Dt) otherwise known as Tiruvidaikali. A number of Buddhist images have been found in recent times in the neighbourhood of this place.[9] Kancipuram had a Buddhist colony in these days[10] Rajaraja, the great, according to the large Leiden Grant (A.D. 1044-46) granted the village of Anaimangalam to a Buddha *Vihara* built at Nagapattinam by Sri Vijaya ruler Chulamanivarman. The Chola Kings like (Virarajendra A.D. 1063-1070) and Kulotunga (A.D 1070-1120) were also patrons of Buddhism. Jatavarman Suntara (A.D 1251-1283), the great Imperial Pantya king appears to have been favourably disposed towards Buddhism.[11] All these evidences prove that the Colas and the Pantyas were not hostile to this religion. A few vestiges of Buddhism lingered on in some parts of the country during Vijayanagar and Nayakka periods (14th - 17th centuries A.D.). These kings were devote Hindus, and patronised Saivism and the Vaisnavism, the two prominent sects of Hinduism. Buddhism, which was on its

heyday until 6th century A.D. lost its prestine glory afterwards and ultimately paved way for decay and decline largely owing to the Hindu revivalistic trends.

Buddha Images

Apart from being one of the forms of Visnu's ten incarnations,[12] several images of Buddha, all in seated posture have been brought to light in the Tamil country by the efforts of archaeologists. The earliest specimen from Tamil region is the one from Vidyadharpuram belonging to the 3rd-4th centuries A.D., now kept in the Madras Museum (M.M.)[13] This museum contains standing images of Buddha from Kancipuram assignable to 6th-7th centuries A.D. Next in date comes large number of Buddha images of 11th-12th centuries A.D. These were evidently belonging to the Imperial Cola period. They are found at Sangamangalam, Kumbakonam, Tiruvalanjuli, (standing), Pattiśvaram, Elayanur, Kottapadi and Manampadi in Thanjavur Dt. Kulittalai and Jayankondacolapuram in Trichirapalli Dt., Valikandapuram, Tiruvetti and Tiruccopuram in South Arcot Dt., Vellanur, Chettipatti and Alankudipatti in the Pudukkottai Dt., Avur in North Arcot Dt., Alagermalai, Anaimalai, Tiruppparankunram and Virasikhamani in Maturai Dt., Kanikiluppai Navalur. Kuvam (M.M), Mankadu, karukkilamarnda-amman temple and Ekambaresvara temple (basrelief) in Kancipuram in Chingleput Dt., Arikamedu and Karatikkuppam in pondicherry Union Territory, Tyaganur in Salem Dt., Manikandi (M.M) in Ramanathapuram Dt., and Matagaram image now in Thanjavur Art Gallery.[14] These are stray specimens unassembled or strung out in and around the places mentioned above, but nowhere we come across exclusive well-built structures or shrines housing them. Most probably Buddha *Chaityas* and *Viharas* had been subjected to constant obliteration were erected and this fact is not apocryphal.

However, the impact of Buddhist culture is present everywhere in architecture and sculpture. The Buddhist architectural pattern can be traced in the various styles found in South India. "The apsidal ended temples, the pyramidal storeyed temple, the waggon headed roof and the circular shrine chamber found in some temples on the west coast are so obviously

Buddhist in origin.[15]" Mahabalipuram architecture largely imbibes the Buddhist art and architecture on the sculptural fashoning alone Hindu artists succeeded in evolving several modelling and patterns, but in architecture nothing innovative was attempted.

Date of the Icons

The icons of Buddha taken here for our study must in all probability belong to the Imperial Cola period. The sculptural modelling and on grounds of comparision with similar icons found at different places suggest this view. This point may also be viewed from the historical perspectives. It appears that they were fashioned during that period when Buddhists enjoyed a certain amount of peaceful life. The religious animosity mainly raged within the sects of Hinduism and not directed against attacking Buddhism. Buddhism was seriously caught into religious imbroglio during the Pallava period. The lone survival was the Kancipuram head quarters. Tirumangai Alwar (8th century A.D.), one of the twelve Vaisnava saints, went to the extent of looting the rich monastery of Nagapattinam with its large Buddha image of solid gold in order to find funds required for building the great Sri Ranganatha temple at Srirangam.[16] From these instances it can well be presumed that Buddhism could find its serene existence under Colas amidst simmering religious struggle within Hinduism, mainly because the Hindu religious heads could find no time in attacking Buddhism since they themselves were vying with one another for philosophical supremacy and secondly Buddhism had become almost a defunct religion having fewer establishments and institutions dotted at places mentioned above. In otherwords it was no longer a religion to be reckoned with. Though the strength of Buddhism was definitely on the wane, yet surviving Buddhists did not perceive peacelessness. Therefore, Buddhist images that survive today largely owe to the tolerance and benevolence of the Colas.

Canonic injunctions

Buddha himself was taken to be one of the incarnations of Visnu, one of the three principle gods of Hinduism (Trimurti) the other being Brahma and Siva. Some authorities maintain

Buddha to be one while others do not consider to be one such. The *puranas* themselves are divided in their view. *Brahmiya silpa* does not include Buddha. *Bhagavata purana* (10th century A.D.) include Buddha into the Vaisnavite pantheon. *Agnipurana Brhatsamhita* of Varahamihira (6th century A.D.) and *Visnu dharmottara* gives a description of the image of Buddha. These *puranic* and agamic works mention that the figure of Buddha should have on its feet and the palms marks resembling the lotus, the body should be full and fresh and of fair complexion and the head should have short curly hair on it. The image as a whole should appear calm and full of grace. It must be seated on a *Padmasana*. The earlobes must be made pendent. The hand should be in the *Varada* and the *abhaya* poses. This description is that of a Dhyani-Buddha[17] *Manasara* says Buddha should be either seated or standing on a lion pedestal under the tree with two hands. He must possess big eys, high nose, smiling countenance, long earlobes and broad chest.[18]

Nadu region and religion of Buddha

Vrddhacalam and its environs in Nadu nadu area served as a centre of Buddhist culture. This fact is not only due to the existence of the images near Vraddhacalam since they are always portable in nature but also to the nomenclature of a village namely Pothiramangalam,[19] 10 km south of Vraddhacalam. Pothiramangalam is obviously a corrupt form of an original Bouddhamangalam.[20] In all probability, it was created for the exclusive settlement of Buddhists by the reigning monarch with a view for fostering their culture and tradition. Similar creations of villages for Brahmanas were made in Tamil country at different periods. They are known as Brahmadeya village or *Chaturvedimangalams* where *Chaturvedins* or scholars of four *vedas* were granted settlement.

10 km. away on the southwest of Pothiramangalam are found two images of Buddha in seated posture in a small hamlet namely, Ogulur and Paravoy, a village southeast of Ogulur and Rajendrapattinam east of Pothiramangalam each has an image of Buddha. These three must in all probability have been carried away from the above stated Pothiramangalam. They are placed facing the eastern direction except the one at Rajendrapattinam. The great author of wheel of Dharma is lying barely

in a bush near Rajendrapattinam. The local village folk adore them as any other deity of Hindu pantheon. They consider it as invaluable property. They even did not allow taking photograph of these icon since they looked askance of my research work near it. There is a thatched roof over the images. They offer regular puja, conduct *abhiseka* (ablution), lit incense, offer cooked food (*neivedyam*) garland them chanting some indistinct hymns but audibly 'om' all on the style of Hindu observances and practices. The principle deities like Siva, Ganapati, Surya, Visnu, Subrahmanya and Sakti are, however, relegated to the background or attach less importance in offering worship to them. They believe in the efficacy of Buddha, and therefore, stesss more emphasize to the adoration particularly while they start doing any fresh business or going for any travel. Invoking the blessings of Buddha is an unquestionable faith among them.

Iconographical Analysis

They appear to be the principle images of a larger shrine. The specimen No.1 is massive in size (137 cm. in height) whereas S.No. 2 is less in bulkiness (123 cm in height) and S.No. 3 ranks well with them in proportion and size. They are proportionately fashioned. The execution is hold and vigorous. S.No.1 have a rectangular plain base. (Pita)[21]. The pita of S.No.1 is to be seen from above whereas S.No.2 is constructed beneath the concrete podium. They are full sculptures, bulky and heavy like the figures of Buddha in Thanjavur Art Gallery. There is no arched festo on otif *(Prabhavali)* high around the figure like the specimens reported from Kuvam, Mandikandi and Karukkilamaradamman temple in Kancipuram.[22] The Kuvam example has a full *Prabha* encircling the whole image like the one often in the case of Nataraja icons of South India. In the case of S.No. 1 a small halo (aureole) around the head portion only is depicted which adds grace to the superior nature of Buddha and a symbol of sublime rediance. In this aspect it resembles the sculpture of Buddha from Jayankondacolapuram.

The hair-curls of ringlet of the hair appear to have been formed in one line offering a fluted appearance around the head which looks similar to the specimens of Tyaganur and Tiruvetti. They have short curls. The curls are not to be distinctly visible in S.No. 1 perhaps it is rather due to the worn-our condition. The

usnisa carved over the head appear rather sharp conical in shape than a smooth bud-like. *The usnisa* of S.No.1 is well worked out so as merging with the aurole depicted behind. The sharpened *usnisa* feature recalls the images of Buddha from Tyaganur and Jayankondacolapuram. It does not exhibit flaming-like-hair-knot as one finds in the examples of Kancipuram and Karatikuppam. The brows and the urna, one of the thirty two superior marks (laksanas of a Mahapurasa) are well worked out.

They appear calm and full of grace. The face of S. No. 1 having a rather long depiction and in contrarily it is round in S. No. 2. The closed eyes express of the mind deeply engrossed in meditation. The nose in both cases appear slightly broken at some places. The lips look thin like the specimen of Matagaram. The pendent earlobes of the S.No.1 is drooping down slightly than S.No.2. The hands are placed in *Yogamudra* or *dhyanamudra* like most of the specimens in the Tamil country except the *bhumisparasamudra* style in the case of Kancipuram and the legs are placed in *Yogasana*. The legs of the S. No. 2. wear *nupuras* (anklets) recalling the icons of Matagaram and Kancipuram. The cloth worn around the body is in *upavita* fashion lacking the natural folds that could normally appear. S. No. 3 is seated in *Yogasana* and placed his hands in *dhyanamudra*. A thin cloth is worn around his light shoulder in the *upavita* fashion. The *usnisa* is pointedly carved.

Conclusion.

Buddhism had a large following before 6th century A.D. It was the religion of the people and the state. Kalabhra rulers being inclined towards Buddhism encouraged Buddhist culture and learning. Between 7th - 10th centuries A.D. it was badly affected by the spurt of Hindu revivalist movement. By means of the Bhakti movement, the Alwars and the Nayanmars were able to stamp out the hold of the Buddhism from among the people duly backed by the royal support. The kings during this period were staunch Hindus. The religious works like *Tevaram* and *Nalayiradivyaprabhandam* of the Saivas and Vaisnavas respectively contain ample references to the annihilation of Buddhists, their *chaityas* and *viharas*. Buddhists, were subjected to impalement and torture. However, between 11th-13th centuries AD Buddhist could find solace and peaceful existence under

the tolerant attitude of Colas and Pantyas. They were no fanatics. Fortunately certain Buddhist vestiges were able to survive the onslaught of vicissitudes of time and the historical process. Innumerable icons of Buddha found scattered in the hamlets of Tamil country vouchsafes this fact. This icons under analysis come from the peripheral region of the Cola state. There existed a big colony of Buddhists in the Nadu-nadu region and therfore judging from these two factors it is evident that the region seen to have a rich Buddhist culture.

Secondly with regard to the iconographical study of the specimens, both can be assignable to the 11th-12th centuries A.D. (Cola period), they are boldly carved exhibiting natural demeanous and grace. The features are prominent and elegant. The sculptural modelling recall interesting features of several specimens. The expression is indivative of sublime tranquillity. It definitely occupies a place in the aesthetic horizon for dexterious chiselling in hard granite medium. Thus they are remarkable masterpieces and its value as an exquisite art-specimen requires no figurative embellishment.

NOTES

1. The modern terminology, Tamil Nadu is not used here but the older connotation, Tamil country is only used since the study pertains to be Tamil country of the yesteryears. Tamil country, according to the *Tolkkappiyum Payiram*, the ancient Tamil grammatical work of the early centuries of the Christian era, refers to as *Vatavenkatam tenkumari ayitait tamil kurum nallulakam* which means the Tamil country is bordered by the hills of Venkatam on the north, Kumari on the south and the seas on the east and west.
2. *Maturaikanci* 475-492
3. *Pattinappalai* 51-53
4. C. Minakshi, *Administrative and Social Life under the Pallavas*, *Madras*, *1975*, p. 218.
5. *Silappatikaram* 10:11-14.
6. K. A. N. Sastri, *The Colas*, Madras, 1975, pp.101-102
7. C.*Minakshi*, p.248.
8. K. A. Nilakanta Sastri, *The Pandyan Kingdom*, *Madras*, *1972*, .p.80
9. Vasudeva Rao, *Buddhism in the Tamil country*, *Annamalainagar*, *1979*, p. 270.
10. *The Colas*, p.657.

11. *Annual Report on Epigraphy* (A.R.E.)1904, No.113. The record is recorded from Tiruccopuram (South Arcot).
12. The figure of Buddha, since it is sanctioned by the Hindu canonic works, is quite often found as one of the forms of Visnu when depicted in cluster. But a separate figure of Buddha rarely occurs.
13. To the north of the Tamil country (in Deccan) we find excellent examples of Buddha from Bharhut, Sanci, Amaravati, Nagarjunakonda and Jaggayapeta (2nd century B.C.-2nd century A.D.)
14. It is not a complete list. There must have been more places for example three images under the study are discovered by me from three villages in South Arcot Dt. The places are enlisted in T. N. Vasudeva Roa's work pp.270-274, and A. Aiyappan and P. R. Srinivasan (Ed.), *Story of Buddhism with special reference to South India, Madras, 1960,* pp.62-95.
15. *A. R. E.* 1915-16, pt.II, P.28.
16. *The Colas*, p.656.
17. T. A. Gopinath Rao, *Elements of Hindu Iconography,* Vol. I, pt.I, Varanasi, 1971, pp.216.
18. H. Krishna Sastri, *South Indian Images of Gods and Goddesses, Madras, 1916,* p.47.
19. K. Chokkalingam (Ed.) (1972) *Census of India-Tamil Nadu* (South Arcot), Vol. II. The suffix mangalam denotes a village of sacred nature having sacred duties.
20. Similar colony bearing this name seem to have had existed in Mayavaram Taluk, Thanjavur Dt. today it is called Tiruvidaikali.
21. The *Pitha* below the Nagapattinam Buddha image is circular (now preserved in the Thanjavur Art Gallery).
22. A. Aiyappan and P. R. Srinivasan (Ed.)*op.cit.* "Buddhist images of South India" pp. 62.

TITLES IN ENGLISH

Title	Author	Price
The Contributions of the Tamils to Indian Culture		
Vol. I Language and Literature	Dr. K. Subbiah Pillai	18.00
Vol. II Art and Architecture	Dr. K. Bhagavathi	30.00
Vol. III Socio Cultural Aspects	Dr. M. Valarmathi	90.00
Vol. IV Religion and Philosophy	Dr. V. C. Sasivalli	80.00
Selected Poems of Bharathidasan		
Translation from Tamil to English	Dr. V. Murugan	60.00
Tamil to Malayalam	Dr. Padmanabhan Thampi, Dr. Desamangalam Ramakrishnan	60.00
Tamil to Kannada	Mr. V. Pasumalai Arasu	60.00
Tamil to Telugu	Dr. C. R. Sharma	60.00
A Comparative study of Tamil and Japanese	Dr. Pon. Kothandaraman	15.00
Chieftains of the Sangam Age	Dr. K. D. Thirunavukkarasu	20.00
Hand Book Tamil	Dr. S. Jean Lawrance & Dr. D. Renganathan	55.00
A Tamil Reader Vol. I & II	Dr. J. Vacek, Dr. S. V. Subramanian	65.00
Tamilnadu Bengal Cultural Relations	(Ed.) Dr. A. N. Perumal, Dr. K. Subbiah Pillai, Dr. Renganayaki Mahapatra	35.00
Thirukkural — The Daylight of the Psyche	Mr. C. Rajasingham	25.00
Tamil Verse in Translation	Mr. P. N. Appuswami	40.00
Heritage of the Tamils — Education & Vocation	(Ed.) Dr. S. V. Subramanian, Mr. V. R. Madhavan	50.00
Tolkappiyam Phonology & Morphology	(Tr.) Dr. D. Albert	25.00
Heritage of the Tamils — Temple Arts	(Ed.) Dr. S. V. Subramanian, Dr. G. Rajendran	50.00
Karaikkal Ammaiyar	Dr. V. C. Sasivalli	6.00
Siddha Medical Manuscripts in Tamil	(Ed.) Mr. V. R. Madhavan	8.00
Heritage of the Tamils — Siddha Medicine	(Ed.) Dr. S. V. Subramanian, Mr. V. R. Madhavan	45.00
Tamil-Text-An auto instructional Course	Dr. N. Deivasundaram, Dr. A. Gopal	25.00
Tiru Murugan	Dr. Kamil, V. Zvelebil	5.00
Dissertations on Tamilology	(Ed.) Dr. Annie Thomas	10.00
Dr. Mu.Va.	(Ed.) Dr. S. V. Subramanian, Dr. Manavalan	20.00
Tamil Language Learning through English — Audio Cassettes		300.00